OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	ஸர்வதாரி ஹூ மாசி மீ	ஸஞ்சிகை 2

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஸ்ஸேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

நூலகம்
189255
600 0

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[எட்டாம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

அபிநிவேசன்:—இனியாளே! காமனை ஜுகுப்ஸை யென்னும் பெண்ணைக்கொண்டும், கோபனை திதிக்ஷை [பொறுமை] என்னும் பெண்ணைக்கொண்டும், லோபனை த்ருப்தி யென்னும் பெண்ணைக்கொண்டும், அஹங்காரனை ஆத்ம வித்யை யென்னும் பெண்ணைக்கொண்டும், இதுபோலவே மற்றவரை மற்றைப் பெண்களைக்கொண்டும் ஜயிக்க நினைக்கிறார்கள். 'புண்ணை மறைய வரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே' என்று ஆழ்வார் 'தேஹத்தின் மேல் தோலுக்குள் என்ன இருக்கிறதென்று ஆராய்ந்தால், மேல் தோலைக் கண்டு மோஹிப்பரோ?' என்று தம் ஜுகுப்ஸையை (வெறுப்பைக்) காட்டுகிறார்.

* "யதி நாமாஸ்ய தேஹஸ்ய யதந்தஸ்தத் பஹிர்பவேத் ।
தண்டமாதாய லோகோऽயம் ஶுந: காகாம்ஶ்ச வாரயேத்॥"

[இந்தத் தேஹத்தின் உள்ளேயிருக்கும் மாம்ஸம் சிறிது வெளியில் காணப்பட்டால், நாயும் காக்கையும் உடம்பின்மேல் விழுந்து குத்தாமல் இருப்பதற்குத் தடியை வைத்துக்கொண்டு ஓயாமல் காத்துக்கொண்டே யிருக்கவேண்டும்] என்று ருஷிகளும் உடம்பின் மீதுள்ள வெறுப்பைக் காட்டினார்கள். உண்மையான ஸ்திதியைச் சற்று உள்ளே பார்த்தால் போதும் வெறுப்புண்டாக. கோபத்தைப் பொறுமையால் ஜயிக்கலாம். கோபித்துக்கொள்ளுகிறவனைப் பதில் கோபியாமல் பொறுத்திருந்தால், அவனுக்கே 'நாம் என் இவனைச்

---

* இந்த ச்லோகத்தின் கருத்து நாலடியார் என்னும் தமிழ்நூலில் அழகாக விவரிக்கப்பட்டிருப்பது கவனிக்கதக்கது:

"மாக்கேழ் மடநல்லாய்! என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை — யாக்கைக்கோர்
ஈச்சிறகு அன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்."

[இதன் பொருள்]'இளமை ஒளி அழகு நற்குணம் முதலிவைகள் நிரம்பியுள்ள பெண்ணே!' என்று எப்போதும் அரற்றிக்கொண்டிருக்கும் சில பெரியோர்கள் இந்த அற்பமான உடலைச் சற்று ஊன்றிப் பார்க்கமாட்டார்களோ? [ஊன்றிப் பார்த்தால்தான் அதன் உண்மை நன்றாக விளங்கும்.] இவ்வுடலில் ஓர் ஈயின் சிறகளவு தோல் நீங்கி ஒரு வ்ரணம் உண்டானாலும், அந்த வ்ரணத்தைக் குத்துவதற்கு வரும் காக்கையை அடித்து ஓட்டுவதற்கு ஒரு கொம்பு வேண்டியிருக்குமே.] [இங்கு ஸ்த்ரீகளை விரும்பிப் புகழ்கிற மதியீனர்களைச் 'சான்றவர்' (பெரியோர்கள்) என்றது விபரீத லக்ஷணை.]

கொ. ஸ்வா.

சீறினோம்?' என்று வெட்க முண்டாகும். 'க்ருத்யஞ்ச ஸக்ருதிக்ருத்யஞ்ச உபயோரேவ சிகித்ஸக:' [கோபத்தால் சீறுகிறவனைப் பதில் கோபியாமல் பொறுத்திருப்பவன் இருவருக்கும் (சிகித்ஸகன்) நோய் தீர்க்கும் வைத்யனுவான்] என்று மஹா பாரதம் கூறுகிறது. கோப மென்பது கோபிப்பவனுக்கும் எரிச்சலைத் தரும். பதில் கோபியாவிடில் அந்த எரிச்சல் அடங்கிக் குளிர்ச்சி பரவும். கோப ஜ்வரம் கோபித்தவருக்குத் தணிவதும், கோபிக்கப்பட்டவனுக்குக் கோபதாபம் உண்டாகாம லிருப்பதும், வ்யாதியை நீக்கல் விலக்கல் முறையே யாகும். கோபத்தைத் திதிக்ஷை (பொறுத்தல்) என்னும் பெண்பாலான குணத்தைக்கொண்டு ஜயித்து அடக்கலாம். லோபம் என்பதை த்ருப்தி என்னும் பெண்பால் குணத்தால் ஜயிக்கலாம். தர்மச் செலவு செய்ய மனமில்லாமல், மேலும்மேலும் பணத்தைக் குவித்து அதைப் பார்த்துக்கொண்டேயிருப்பதில் ஆசை லோபம். 'யத்ருச்சாலாப ஸந்துஷ்ட:' என்பது கீதை. * 'த்ருஷ்ணாக்ஷய ஸுகத்திற்கு ஸ்வர்க்காதி ஸுகங்கள் ஒன்றும் ஈடாகா' என்பர்.

ஒரு பொருளில் ஆசையை வைத்து ஆயிரம் பாடுபட்டுத் தேடுவதையும், அப்படித் தேடியும் கிடையாவிடில் துக்கப்படுவதையும்காட்டிலும், முதலிலேயே ஆசையை வைக்காமல் சும்மா யிருந்துவிட்டால் எத்தனையோ ச்ரமம் மீறும். அஜகரருக்கும் ப்ரஹ்லாதருக்கும் நடந்த பேச்சை த்ருப்தி விஷயத்தில் உதாஹரிப்பர். அஹங்காரம் என்பது, தேஹத்திலும் இந்த்ரியங்களிலும் நான் எனும் தப்பு புத்தியையும், நாமே நம் பெருமைக்கு மூல மென்று கர்வப்படுவதையும் சொல்லும். ப்ராக்ருதமான உடல் இந்த்ரியங்களைக்காட்டிலும் ஆத்மாவாகிய தான் வேறென்னும் ஆத்ம வித்யையால் தெளிவான உணர்வு பிறந்து, தேஹத்தில் நானென்னும் அஹங்காரம் தொலையும். எல்லாம் பரன் என்னும் ஈச்வரனுடைய ஆயத்தமானதாலும், யாவும் அவன் ஸங்கல்பத்தால் நடப்பதாலும், அவனுடைய ஸொத்தான நாமும் நம் உடைமையும் அவனுக்கே சேஷம். நமக்கு என்ன பெருமை ஏற்பட்டாலும் அது அவனாலேயே கிடைத்த தென்பதையும் ஆத்மவித்யை தெளிவிப்பதால், அது நம்முடைய கர்மத்தையும் தற்புகழ்ச்சியையும் தொலைக்கும். கெட்ட குணங்களை அடக்கும் நற்குணங்கள் பெண்பால் பதங்களால் குறிக்கப்படுகின்றன. மூன்றாவது அங்கத்தில் பெண்களைக்கொண்டே விவேகரை ஜயித்துவிடுவதாக மன்மதன் வீரவாதம் பேசினான். அதற்குப் ப்ரதியாக விவேகராஜர் காமன் முதலிய வீரர்களைப் பெண்படையைக்கொண்டே ஜயிக்க முயற்சிக்கிறார் என்று ரஸம்.

---

* 'வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.'

—திருக்குறள் 37-ம் அதிகாரம்—3.

[இதன் பொருள்:—ஒரு பொருளையும் அவாவாமையைப்போலும் சிறப்புடைய செல்வம், காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை. (அவ்வளவே யன்றி), கேட்கப்படுகின்ற (அதாவது: காணப்படாத) துறக்கத்தின்கண்ணும் (ஸ்வர்க்க லோகத்திலும்) அதுபோல்வது இல்லை.]

துர்வாஸனை:—வெறும் வீரப் பேச்சும் ஆர்ப்பாடமும் மட்டும் கார்யத்தை ஸாதிக்குமோ? இம்மதிகேடர்கள் விளக்கில் விழும் விட்டில் பூச்சியைப் போல் தங்கள் நாசத்தையும் தேடுகிறார்கள். [மனம், புத்தி யென்னும் விளக்கு வெளிச்சத்திலிருந்து காமம் கோபம் லோபம் முதலிய கெட்ட புத்திகள் கிளம்பியுள்ளன. இந்தப் புத்தி தோஷங்களை ஸாத்விகமான நல்ல புத்திகள் மனத்திலிருந்து கிளம்பி அழிக்கையில், கெட்ட புத்தி ஜ்வாலையில் விழுந்து விளக்குப் பூச்சியைப்போல் மடியும் என்பது அவர்கள் கருத்து.]

அபிநிவேசன்:—நானும் அப்படியே நினைக்கிறேன். ஆயினும், யத்ருச்சை (விதி) என்னும் தேவி என்ன செய்வாளோ? விதியினால் நடக்கப் போவதை நான் எப்படி ஊஹிக்க முடியும்? [ஒருவேளை ஆத்ம ஜ்யோதிஸ் என்னும் விளக்கே அவர்கள்மேல் விழுதலால் அணைந்து விடலாம்.]

துர்வாஸனை:—அப்படி நேர்ந்தால் மஹாராஜர் வரையிலுள்ள நம் ப்ரபுக்களின் நாஶம் நேரிடலாம்.

அபிநிவேசன்:—[புருவத்தை நெறித்துக்கொண்டு] இனியாளே! நான் என்றைக்கும் ஜீவித்திருப்பவனே; அதற்கு வழியிருக்கிறது. மஹாமோஹருக்கு ஆட்பட்டு இத்தனை நாளாக நான் கெட்ட வழிகளில் பிடிவாதத்தால் தேடிவைத்திருக்கும் கர்மக் குவியலை ஒழிக்க வெண்ணி, மோக்ஷம் பெறும் ஆஶையைக் கைப்பற்றி, அதற்கு ஸாதநமான நல்ல வழிகளில் இப்படியே பிடிவாதத்தைச் செலுத்தத் தொடங்கினால், நான் விவேகருக்கு ஆளாயிருந்து அவர் கிங்கரனாகப் பிழைக்கலாம். யோகாப்யாஸ வழியில் பிடிவாதமாய்ப் பயிற்சி செய்யும் அபிநிவேஶனாக மாறி நான் சிரஞ்சீவியா யிருக்கலாம். தேவி! ஏன் பயப்படுகிறாய்? நீயும் 'துர்' என்கிற எழுத்தை அடித்துவிட்டு, 'சுபவாஸனை' என்னும் பெயருடன் என் பத்நியாக என்னோடுகூடவே மங்களத்தோடு சிரஞ்ஜீவியாக இருப்பாய்.

துர்வாஸனை:—என்னிடம் எத்தனை மங்களமான புத்தி! நம்முடைய புராதந ஸ்வாமியான மஹாமோஹ அரசனுக்கு அழிவு வந்தபோதும், என் கணவரான நீரும் பிழைத்திருந்து உமக்கு ப்ராணனான என்னையும் காப்பாற்ற உறுதி கொண்டிருக்கிறீரே.

அபிநிவேசன்:—நீ என் ப்ராணனுக்கு ஸமமானவ ளென்பது மட்டுமல்ல ; என் ப்ராணனுக்கு நீயே ஈச்வரீ.

துர்வாஸனை:—என் பாக்யமே பாக்யம். இப்படி என்னைப் புகழ்கிறீரே. ['ஸம்வ்ருத்தர்' என்பதற்கு 'ஆனேன்' என்றும், 'முடிந்தேன்' என்றும் இரண்டு பொருள்கள். இரண்டாவது பொருளையும் தருவதால் இது அச்சான்யமாகிறது.]

[தொடரும்]

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வரவரமுநயே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M, A., வித்வான் L. T., திருவையாறு]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

அரசனுக்கு ப்ரஜ்ஞை வரவும் அவன் கண்விழித்தான். அந்த மண்டபம் முழுவதும் பதினாயிரம் நீலக் கதிரவன் ஏககாலத்தில் உதயமானாற்போல் ஒரு பேரொளி எங்கும் பரவிற்று. அவ்வொளியிடையே, நீல மாமுகில் போன்ற வடிவும், நாற்றோளும், திவ்யாயுதங்களும், பீதகவாடையும் கொண்ட ஒரு திவ்ய புருஷன் நின்றான். இனிய குரலில், "மன்னவனே! சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களையும் தன்னாலே தானே படைத்த தயாநிதி ஒருவன் உண்டென்பதை மறந்து, அவனுடைய ஸர்வேச்வரத்வத்தை உன்பாலேற்றி அஸஹ்யாபசாரப் பட்ட உன் மதியீனத்தை என்னென்றுரைப்பேன்! ஆயினும் ஸர்வேச்வரனிடம் அன்பு பூண்டொழுகிய இப்பாண்டிய குலத்தின் பெருமையை நினைத்து, உன்னிடம் பரமக்ருபை பூண்டு அப்பரந்தாமன் உனக்கு நற்புத்தி புகட்டுமாறு என்னை அனுப்பினன். நந்தநன் என்னும் நித்யஸூரி கணத்தவனாவேன் யான். நீ வைகை யாற்றில் மூழ்கியவுடன் உன் உடைகளை மறைத்து, உன் வடிவமும் எடுத்து, இப்பாண்டிய ராஜ்யத்தை இதுகாறும் பரிபாலித்துக் காண்பித்தேன். இனியேனும் இப்பாண்டிய பூமி பரம தயாநிதியால் உனக் களிக்கப்பட்ட அடைக்கல மென்றும், அதை அவனது ப்ரதிநிதியாகப் பரிபாலிப்பது உன் கடமை யென்றும் உணர்ந்து, தெய்வ பயமும் ஸத்யமும் நீதியும் ஓங்குமாறு பரிபாலிப்பாயாக. மன்னா! நீ வாழ்க!" என்று அத்திவ்ய புருஷன் உரைத்து மறைந்தான்.

ஆச்சர்யத்தாலும் பயத்தாலும் வெட வெட வென்று நடுங்கிய மன்னன், திடீரெனத் தன்னை வைகை யாற்றில் குளிப்பதாகக் கண்டுகொண்டான். ஆச்சர்யத்துடன் மன்னன் கரையேறி, 'கடுங்கால்! கடுங்கால்!' என்று விளித்தான். குதிரை தன் குரல்காட்டிக் கனைத்தது. வஸ்த்ரங்களும் பூஷணங்களும் கதிரவன் ஒளியால் மின்னின. தன் மேனியில் அழுக்காடையக் காணாது வியந்து கொண்டிருந்த மன்னவனது முன்னிலையில் இரு குதிரை வீரர் பணிந்து நின்றனர். 'பாண்டிய குலோத்தம்ஸனே! நின் கொற்றம் வாழி; நின் சேனை யாவும் அதோ கூப்பிடு தூரத்தில் காத்திருக்கின்றன. வெகு நேரம் ஸ்நாநத்தில் போக்கி விட்டீர்கள்' என்றனர். மந்திரி, ப்ரதாநி, மற்றும் நண்பர்கள் குதிரை களின் மேல் ஊர்ந்து வந்து மன்னவனைப் பணிந்தனர்.

'வேட்டையாடி வழி தவறிய நான் ஸர்வேச்வரன் அருளால் உங்களைத் திரும்பவும் பார்த்தேன்' என்று அரசன் உரைக்கவும், மந்த்ரி ப்ரதாநி முதலி யோர் திகைப்புற்றனர். அரசன் இதுகாறும் ஸர்வேச்வரன் என்ற நாமமே

உச்சரித்ததில்லை. பரிவாரங்களுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான். அவன் முகம் எல்லையற்ற தாழ்மையும் துயரமும் கொண்டது.

மார்க்கத்தில் கூடல் நகர் கோயில்கொண்ட கோவலனது திவ்யாலயம் வந்தவுடன், அரசன் குதிரையை விட்டிறங்கித் தன் பட்டாடைகளை அகற்றி, அரையாடையுடன், அரையில் சுற்றப்பெற்ற உத்தரீயத்துடன் கோவில் வாயிலிலேயே மண்ணில் புரண்டு நமஸ்கரித்தான். 'ஸர்வ சக்தியே! ஸர்வாந்தர்யாமியே! ஸர்வ ஸ்வாமியே! ஸர்வேச்வரனே! என் பாதகத்தைப் பொறுத்தருளும். இதோ உமக்குத் திவ்யோபஹாரமாக 'நான்' என்னும் அஹந்தையைக் கொடுத்தேன். என் அழுக்குற்ற ஆவியை நின் பொருளாக்கிக்கொள்ளும். என் கண்ணீரையும், அநுதபிக்கும் என் நெஞ்சையும் நோக்கியருளும். 'யஜிவா ராவண: ஷயழ' என்ற நின் திருமுகப் பாசுரமே பலமாய் ஏழையேன் வந்துற்றேன். என் ஆண்டவனே! என் இறையே! என் புகலே! என் வாழ்வே! என் மதியே! என் ஒளியே! என் ஊகமே! என் பயனே! என்னை உனக்காக வைத்து, உன் இன்பத்திற்கு ஒழுகுமாறு வழி நடத்துவாயாக. யான் நிற்பது உன்னால். உயிர்ப்பது உன்னால். நினைப்பது உன்னால். எல்லாம் உன்னைக் கொண்டு யான். யான் யானல்லன். என்னை அழித்து உன் பொருளாக மாற்றிக்கொள். என்னுள் இயங்கி என்னை இயக்குவது நீ; என்னுள் களிப்பது நீ; கலந்தது நீ; உயிர்ப்பது நீ; உற்றுறவாடுவது நீ. யானிருப்பது உன் திவ்ய ஸங்கல்பம். அரசே! என் ஆருயிரே!' என்று புரண்டு புரண்டு பிதற்றினன். திடுக்கிட்ட மந்த்ரிகள் அவனை வாரியணைத்து உபசரித்தனர். கோயில் உள்ளிருந்து வாத்ய கோஷத்துடன் திருமாலது திருவடி நிலைகள் எழுந்தருளின. முடியணிந்த மன்னவனது சிரம்—யாவர்க்கும் வணங்காத சிரம்—பரபரப்புடன் 'திருமால் தொண்டர்! அடியேன் உட்புகுமுன் ஸ்ரீ சடாரியை இவண் கொணர்ந்தது என்?' என்று பதறியுரைத்தவண்ணம் வணங்கிற்று. ஆகாய வீதியில்,

“பாண்டேன் வண்டறையும் குழலார்கள்பல் லாண்டிசைப்ப
ஆண்டார் வையமெல்லா மரசாகிமுன் னாண்டவரே
மாண்டா ரென்றுவந்தா ரந்தோமனை வாழ்க்கைதன்னை
வேண்டேன் நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே.”

என்றொரு திவ்ய காநம் கேட்டது. இவ்விசை வெள்ளத்தில் மூழ்கிய மன்னவன் விக்கி விக்கி அழுதவண்ணம், 'தெய்வமே துணை; அவன் திருவடி நிழலே துணை; பண்டு பரதனைக் களிப்பித்தவை யல்லவா அவை ? அரச சின்னங்களைப் போகட்டுக் கல்லாடை தரித்துப் பரதன் மகுடமாய்ச் சூடியவை அவையல்லவா ?' என்று சொன்னன். கூட இருந்தவர் யாவரும் ஆநந்தத்தாலும் ஆச்சரியத்தாலும் மெய்ம் மறந்தனர். குவித்த கையுடன் அரசன் கோவிலுக்குள் புகுந்தான். இம்மன்னவன் பின்னர் ராமபிரான் போல் ராஜ்யத்தை ஆண்டான் என்றால் மிகையாமோ?

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நமது ஆசாரங்களும் அநுஷ்டாநங்களும்

[திருமண் காப்பு விஷயம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்B.A.,மேல் மாம்பலம்]

“பெருமாளுக்கும் நமக்கும் இல்லாத உறவே கிடையாதுடா. வேலைக்காரனுக்கு யஜமானன் சம்பளம் கொடுக்கிறான் என்றாயோ இல்லையோ? நாம் சாப்பிடுகிற சாதம் அவர் கொடுப்பதுதானே! உடுத்துகிற துணியும் அவர் கொடுப்பதுதானே! எல்லாவற்றையுங்காட்டில் நமக்கெல்லாம் அவர்தான் ப்ரபு என்கிற ‘சேஷ சேஷி’ ஞானத்தையும் கொடுக்கிறாரே. அத்தோடு நாம் அவருடைய குணங்களில் ஈடுபட்டுவிட்டால், அவருக்குக் கைங்கர்யம் பண்ணுவதற்குக் கூலியா கேட்போம்? ‘பரமபுருஷனுக்குக் கைங்கர்யம் பண்ணுகிறோம்’ என்கிற ஸந்தோஷமே போதாதா? பெருமாள் யஜமானன் மாத்திரமில்லை. அவர்தான் நமக்குத் தாயார், தகப்பனார், புருஷன், மனைவி, குழந்தை எல்லாம். அன்பு என்று எடுத்துக்கொண்டால், தாயார் குழந்தையிடம் காட்டும் அன்புதானே சிறந்தது. அதைக்காட்டிலும் பெருமாளுடைய அன்பு ஆயிரம் மடங்கு அதிகம். ‘புருஷன் மனைவிக்குத் தன்னையே கொடுத்துவிடுகிறான்’ என்பது வெறும் உபசார வார்த்தை. உண்மையில் தம்மையே தம்முடைய பக்தர்களுக்குக் கொடுத்துவிடுகிறவர் பகவான்தான். அதனால் அவருக்குத் ‘தம்மையே கொடுக்குங் கற்பகம்’ என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பெருமாளுக்கு நாம் செய்கிற பதில் உபகாரம் ஏதாவது உண்டா? பதில் உபகாரத்தைத் தான் அவர் எதிர்பார்க்கிறாரா? நம்முடைய பக்திக்குப் போக்குவீடாக அவரை வாயால் வாழ்த்துகிறோம். அவருடைய திருவடிச் சின்னங்களைத் தரிக்கிறோம். இதைக்கூடச் செய்யாமல் இருக்கலாமா?” என்றார்.

‘நெற்றியில் திருமண் ஸ்ரீ சூர்ணம் இரண்டுமாக இட்டுக்கொள்கிறோமே! திருமண் காப்புத்தான் பெருமாளுடைய திருவடியைக் குறிக்கிறது; ஸ்ரீ சூர்ணம் எதைக் காட்டுகிறது? தாத்தா!’ என்றான் ரங்கன்.

‘நெற்றியிலே திருமண் காப்பைப் பெருமாளுடைய திருவடிமாதிரி இட்டுக்கொள்ளுகிறோம் அல்லவா? இந்தக் காப்பு, மத்தியில் இடைவெளியுள்ளதாகவும் விசாலமானதாகவும் இருக்கவேண்டுமாம். இந்த நடுப் பாகத்தில் பெருமாளும் லக்ஷ்மியும் விளையாடுகிறார்களாம். நடுவில் இட்டுக்கொள்ளும் மஞ்சள்காப்பு, அங்கு, மங்களங்களைக் கொடுக்கிற ஸர்வ மங்கள தேவதையான பிராட்டி பெருமாளோடு விளையாடுகிறதைக் காட்டுகிறது. திருமண் காப்போடு இந்த மஞ்சள்காப்பு சேர்ந்திருந்தால் எவ்வளவு அழகாக இருக்கிறது! இல்லையா?’ என்றார்.

பேரன்:—'திருமண் காப்பை ஏன் ஊர்த்வ புண்ட்ரம் என்கிறார்கள்? தாத்தா!'

தாத்தா:—'இந்தப் புண்ட்ரம் தன்னைத் தரிக்கிறவனுக்கு ஒரு ரக்ஷையாக இருந்து அவனைக் காப்பாற்றுவதால் அதற்குக் 'காப்பு' என்று பெயர். ஊர்த்வம்' என்றால் மேல்பக்கம் இல்லையா? பக்தர்களை யெல்லாம் கீழேயுள்ள ஸம்ஸாரத்திலிருந்து, எல்லாவற்றுக்கும் மேலான மோக்ஷமாகிய பெருமாள் பதத்துக்குத் தூக்கி விடுகிறது. இதனால் இதற்கு ஊர்த்வபுண்ட்ரம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். பக்தர்களைக் கைகொடுத்துத் தூக்கிவிடுகிறது என்கிற பஹுமானத்தால்தான் பெருமாள்கூட இதைத் தமது திருநெற்றியில் தரித்துக்கொள்கிறார்' என்றார் தாத்தா.

'நீங்களெல்லாரும் ஏன் பன்னிரண்டு திருமண்காப்புகள் இட்டுக்கொள்ளுகிறீர்கள்? தாத்தா' என்று கேட்டான் பேரன். உடம்பெல்லாம் கோலம் போட்டது மாதிரி இட்டுக்கொள்கிறார்களே என்று நினைத்தான். அது அவனுக்குக் காரணஞ் சொல்ல முடியாத ஏதோ ஒரு மூட வழக்கம் என்று தோன்றிற்று.

அவன் மனத்தில் நினைத்துக்கொண்டிருந்தது தாத்தாவுக்கு விளங்கி விட்டது. 'ஏண்டா! பெரியவர்களாக ஒருவர் நம்மூருக்கு வந்தால் நாம் என்ன செய்கிறோம்? அவர்கள் ஸந்தோஷ மடையும்படி ஊரை அலங்காரம் பண்ணி, தோரணங்கள் கட்டிப் பெருக்கி மெழுகிக் கோலம்போட்டு அவர்களை எதிர்கொண்டு அழைக்கவில்லையா? அப்படி அழைத்தால்தானே அவர்கள் நம்மிடம் ஸந்தோஷம் அடைகிறார்கள். மிகவும் இழிவான நம்முடைய உடம்பைக் கோவிலாகப் பண்ணிக்கொண்டு நம்மை ரக்ஷிப்பதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறார் பெருமாள். கேசவன் நாராயணன் என்கிற பன்னிரண்டு வ்யூஹ மூர்த்திகளும், நெற்றி முதலிய பன்னிரண்டு இடங்களை உகந்து திருவுள்ளம்பற்றினார்கள். இவர்கள் இருக்குமிடந்தான், நான் திருமண்காப்பு இட்டுக்கொள்ளுகிற இடங்கள். மூர்த்தந்ய நாடியின் இடமாகிய உச்சந்தலையில் வாஸுதேவ மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். ஆகையால் தலையிலும் ஒரு திருமண்காப்பு இட்டுக்கொள்ளவேணும் என்றும் சில ப்ரமாணங்கள் கூறுகின்றன. பாரதக் கதைகள் உனக்கு எவ்வளவோ சொல்லியிருக்கிறேன் அல்லவா? பாண்டவர்களுக்குத் தூதனாக க்ருஷ்ண பகவான் ஹஸ்திநபுரம் போனபொழுது பெரிய பெரிய அரண்மனைகள் எதிர்ப்பட்டன. பெருமாளும் வேடிக்கை பார்ப்பவர்போல 'இது யார் வீடு? இது யார் வீடு?' என்று கேட்டுக்கொண்டே போனார். 'இது என் வீடு, இது பீஷ்மருடையது, இது த்ரோணருடையது, இது கர்ணனுடையது, இது சகுனியுடையது' என்று எல்லாரும் சொல்லிக்கொண்டே வந்தார்கள். 'அப்படியா! அப்படியா!' என்று ஆச்சர்யப்பட்டவர்போல் பகவான் போய்க்கொண்டிருந்தபோது ஒரு வீட்டைக் காட்டி, 'இது யாருடையது?' என்றார். அது விதுரர் மாளிகை. அஹங்காரமும் மமகாரமும் அற்ற அம்மஹான் 'இது என்னுடையது' என்று சொல்லவில்லை. பின்னே

என்ன சொன்னார் தெரியுமா? 'இது தேவரீருடைய திருமாளிகைதான்' என்றார். 'என்ன! எனக்கு இந்த ஹஸ்திநபுரத்தில் ஒரு திருமாளிகையா! சரி; எல்லாரும் நில்லுங்கள்; நான் என்னுடைய வீட்டைப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று உள்ளே நுழைந்தார்.

'அஹங்கார மமகாரங்களால் தூஷிக்கப்பட்ட இடங்களைப் பெருமாள் உகப்பதில்லை. திருமண் காப்பிட்டு, 'இது பெருமாள் எழுந்தருளும் கோவில்' என்று நாம் அவருக்கு ஸமர்ப்பிக்கும் இடங்களில், தாமும், பிராட்டிமார்களும், இன்னும் நித்யஸூரிகள் ஒருவரும் பாக்கியில்லாமல வந்து எழுந்தருளுகிறார்கள். நம்முடைய ஸர்வத்தையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டு, அவர் அவற்றைத் திருவுள்ளம்பற்றுவதையே புருஷார்த்தமாக நினைக்கும் நமக்கு இதைக்காட்டிலும் அதிகம் என்ன வேண்டும்?' என்றார் தாததா.

இவ்வாறு பொழுது போவது தெரியாமல் வெகு நேரம் தாத்தா பேசிக்கொண்டே போனார். பேரனும் மற்றவர்களும் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். கடைசியில், 'திருமண் காப்பைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறதாக நினைத்தேன். அதன் மஹிமையின் ஏகதேசங்கூடச் சொல்ல முடியவில்லை. நீங்கள் பெரியவர்களான பிறகு வேதாந்த தேசிகன் அருளிய ஸச்சரித்ர ரக்ஷையைக் காலக்ஷேபம் பண்ணுவீர்கள். அப்போது எல்லாம் தெரிந்துவிடும்' என்று முடித்தார்.

குழந்தைகள் வெளியே ஓடினார்கள். தாத்தா தாம் ஏதோ ஒரு பெரிய கார்யத்தை ஸாதித்துவிட்டதாக எண்ணி த்ருப்தியடைந்தா .

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

* மது வித்யை

[மறுப்புரை]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு]

(13) மோக்ஷார்த்தமான ப்ரஹ்மோபாஸநம் எல்லாவற்றிலும் முக்த்ய வஸ்த ஸ்வாத்மோபாஸநமானது ஆவச்யகம் என்பதாக ஶரீரேபாவாதிகரணத்திலே நிர்ணீதம். [சா—3—3.21]

“ [illegible]
[illegible] ”

---

* மதுவித்யை விஷயமான விசாரம் இதோடு முற்றுப்பெறவேண்டு மென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. ஸம்பாதகர்

என்று ஸ்ரீபாஷ்யத்திலே தத்க்ருது ந்யாயத்தினலே முக்த்யவஸ்தோபாஸநத்தை ஸமர்த்தநம் செய்திருக்கிறர். மது வித்யையிலும் முக்த்யவஸ்தோபாஸநம் ஆவச்யக மென்பதை அபலபிக்க வொண்ணுது. மது வித்யையில் முக்த்யவஸ்தோபாஸந மில்லை யென்றல், உபாஸகரான ஆதித்யாதிகளுக்கு நித்ய ஸம்ஸாரமே ஸித்திக்கும். இவ்வம்சத்தை முன்பே சொல்லி யிருக்கிறேன். ஆகவே 'காரணுவஸ்தம்' என்ற ஸ்ரீபாஷ்யத்திற்கு, 'முக்த்யவஸ்தம்' என்று உபநிஷத் பாஷ்யத்திலே விவரணம் அருளியது ஶரீரேபாவாதிகரண ஸித்தாந்தத்திற்கு மிகவும் பொருத்தமாயுள்ளது. 'ஸ்வாப்யய' ஸூத்ர ச்ருதப்ரகாசிகையில் காரணுவஸ்தத்வ மென்பது கார்ய தசைக்கு மாறுதலான நிலை என்றும், முக்தி தசையிலும் இது துல்ய மென்றும் ஸ்தாபித்திருப்பதையே மது வித்யா ப்ரகரணத்தில் உபநிஷத் பாஷ்யகாரர் அருளியிருக்கிறர். ஆகவே: ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகா நிர்ணயங்களைக்கொண்டே உபநிஷத் பாஷ்யார்த்தம் நிலைநிற்கிறது.

(14) மத்வதிகரண ச்ருதப்ரகாசிகையில், இந்தக் கார்யவஸ்தைக்குமுன் நிலை காரணுவஸ்தை என்பதாகக் காண்கிறது. இதற்கு முன்புள்ள ப்ரளயாவஸ்தையே காரணுவஸ்தை. 'ஊா நீம் ஹரஷெ: வ-ூவ-ும்'. 'இந்தக் கார்யாவஸ்தைக்கு முன்பு' என்பத க அங்குள்ள ஸூக்தி. 'ஹாவி நூா: ஹரஷெ: வ-ூவ-ும்' என்றே, 'ஹரஷெ: வஶம்' என்றே அருளவில்லை. மூல ச்ருதியி லுள்ள 'சுஶ' சப்தத்திற்கு ஆநந்தர்யம் விவக்ஷிதமானல், 'ஹரஷெ: வஶம்' என்று அருளியிருக்கவேண்டும். 'ஹாவி நூா:' என்று அத்யாஹாரம் செய்வதானது அநுஷங்காதிகரண ந்யாய விருத்தமுமானது. அத்யாஹாரத்தைக் காட்டில் அநுஷங்கமே முக்ய மென்பத அவ்வதிகரண ஸித்தாந்தம். ஆஸ்ருத்யுபக்ரமாதிகரண ஸ்ரீ பாஷ்யத்திலே (4—2—5)

" சுவாஊா நாவெக்ஷாயாம் சுஶு-தாகுஶவீஶாக ஸம்பவநிதயா ஶு-த
ஸ்ாதந வனவ ஸநிஹிதவெ நாவாஊா நதயாவிர ாஹுகவாக "

என்பதாக ஸித்தாந்தித்தார். அந்த ந்யாயம் இங்கும் துல்யம். 'நதஸ் ஹூாணா: உகாமநி' என்கிற ச்ருதியில் 'தஸ்' என்கிற பதமானது பூர்வம் ப்ரக்ராந்தனை ஜீவனையே போதிக்கும். சரீமானது ச்ருதமன்று. அதைப் பராமர்சிக்கமாட்டாது என்பதாக 'ஹுதிஷெயாதி திஶந ஶாஶீாக' என்கிற ஸூத்ர ஸ்ரீ பாஷ்யம் அங்குள்ளது. இங்கும் ஹாவி ஸ்ருஷ்டியானது அச்ருதை. இப்பொழுதுள்ள கார்யநிலை 'ஊா நீம் நாமரூவஹாஜ:' என்று ச்ருதை. இதையே மேலுள்ள 'ஸ்ருஷடி' சப்தமானது போதிக்கும். 'ஊா நீம்' என்கிற பதத்தை 'ஊா நீம் ஹரஷெ:' என்று அநுஷங்கம் செய்யாவிடினும் இந்த அர்த்தமே பலிக்கும். அநுஷங்கம் செய்தால் கண்டரவேண இவ்வர்த்தம் கிடைக்கிறது. ஹாவி ஸ்ருஷ்டியை இரண்டு விதமாகவும் இங்கு விவக்ஷிக்க முடியாது.

15. இங்கு 'ஹரஷெ: வ-ூவ-ும்' என்று பொதுவாக இருப்பதால், ஹாவி ஸ்ருஷ்டியைக் கொள்ளலாம் என்பது இவர் நிர்வாஹம். இப்படியாகில்,

இங்கு ஆதித்யாதி ஸ்ருஷ்டி என்று விசேஷித்துச் சொல்லாமையால், இதர ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளய தசையிலேயே ஆதித்யாதிகள் முக்தி பெற்று நிற்கும் நிலையை ச்ருதப்ரகாசிகையில் அருளியதாகவும் கொள்ளலா மன்றோ ?

" ஶூஜி தூாஜி நாஶ ஶவாஊ ஹிதஜீவஶா த்ரூஹுாணுய ஜாஶி ஊஹ காஊணாவஹூ° "

என்று ஜீவ மாத்ரத்திற்கு அந்தர்யாமி என்பதாக 'மாத்ர' சப்தமும் இங்குள்ளது. ஸூக்ஷ்ம சரீரத்தை விலக்குவதற்காக 'மாத்ர' சப்தம். ஆகவே முக்த்யவஸ்தையைக் காரணுவஸ்தம் என்று 'ஸ்வாப்யய' ஸூத்ரத்தின்படி இங்கும் கொள்ளலாம். இவர் நிர்வாஹத்தின்படி முக்த்யவஸ்தையிலே ச்ருத ப்ரகாசிகாசய மென்னலாமே.

16. இப்பொழுதுள்ள கார்யவஸ்தையோடு ஆதித்யாதிகளை உபாஸித்தலால், தத்க்ருது ந்யாயத்தாலே கல்பாந்தரத்திலே மறுபடி ஆதித்யாதி பதம் ப்ராப்த மாகிறது. இந்தக் கார்யாவஸ்தைக்குப் பிறகு உள்ள காரணுவஸ்தாவானுக உபாஸிப்பதாகில் யதோபாஸநம் பலமாகையாலே இரண்டு முறை ஆதித்ய பதம் ப்ராப்தமாகவேண்டி வரும். மது வித்யையில் இரண்டு கல்பங்களில் இரண்டு ஆதித்ய பதங்கள் ப்ராப்யங்களாகக் கொண்டா லன்றி, ஸாவி காரணுவஸ்தோபாஸநத்தை நிர்வஹிக்க வழியில்லை. முக்த்யவஸ்தோபாஸநத்தை இசையாத பக்ஷத்தில் மதுவித்யா நிஷ்டனுக்கு முக்திக்கும் ப்ரஸக்தி யில்லை. நித்ய ஸம்ஸாரித்வமே பல மென்று கொள்ளவேண்டும். ஸ்ரீ பாஷ்யத்தி லுள்ள கார்ய காரண சப்தங்கள் பரஸ்பர ப்ரதி ஸம்பந்திகங்களான கார்ய காரணங்களையே போதிக்கும். ஆதலால் ஸாவி காரணுவஸ்தை ஸ்ரீ பாஷ்யத்திற்கு விவக்ஷித மன்று; ச்ருதப்ரகாசிகைக்கும் அர்த்த மன்று. அர்த்தௌசித்யமு மில்லை. இந்தக் கார்யாவஸ்தோபாஸநத்திற்கும் இதற்குப் பிறகு வரப்போகும் கார்யாவஸ்தைக்குக் காரணபூதாவஸ்தா விசிஷ்டோபாஸநத்திற்கும் இரண்டுக்கும் இரண்டு கல்பங்களில் ஆதித்யாதி பதங்கள் இரண்டு அநுபவிப்பதாக ஸித்திக்கிறது. முக்த்யவஸ்தோபாஸந மிராமையால் மோக்ஷம் பெறுவதற்கில்லை. இதுவே மத்வதிகரண வ்யாஸத்தின்படி ஏற்படுகிறது. உபநிஷத் பாஷ்யத்தில் அருளிய பக்ஷ த்வயத்திலும் ஸாவி காரணுவஸ்தோபாஸந மில்லை. ஆகவே: இரண்டு ஜந்மங்களுக்கு ஆவச்யகதை யில்லை.

17. மத்வதிகரண வ்யாஸ கர்த்தாவின் நினைவின்படி 'காரணுவஸ்தை' என்பதற்கு, 'அடுத்த ஸ்ருஷ்டிக்குப் பூர்வநிலை' என்று தாத்பர்யமா யிருந்தால், 'ஹாயதெ ஶஹுவுயொமெ' என்கிற ந்யாயத்தின்படி ஸ்ரீ பாஷ்யத்தில் 'ஸாவி காய ஶாவஹூாஹெ தவஹூா' என்று அருளியிருக்கலாமே. ஸம்ப்ரதாய க்ரமமாகக் கேட்ட அர்த்தத்தைப் பட்டோலை யாக்கின ச்ருதப்ரகாசிகையிலாவது 'ஸாவி ஶரஷெ: வஶவஷ°' என்றோ, 'ஶரஷெ: வஶ°' என்றோ ஸாதித்திருக்க வேண்டுமே.

"ஊஷா.நீ° ஶூஜி தூாஜி நாஶ ஶவஹாஜொவி ஶரஷெ:வஶவஷ°
ஶூஜி தூாஜி நாஶ ஶவாஊ ஹிதஜீவஶா த்ரூஹுாணுய ஜாஶி ஊஹகாஊணாவஹூ°"

என்று அருளலாகுமோ ? ‘ உஷா நீம்ஸ்ருஷ்டே: ஸகாஶம் ’ [இந்த ஸ்ருஷ்டிக்கு முன்] என்கிற அர்த்தமே யன்றோ கண்டோக்தமா யுள்ளது?

18. மூல ச்ருதியில் ‘ ஸ்ய தத்ஸூர்ய உதேதா ’ இத்யாதி வாக்யமானது, இப்பொழுது கார்யாவஸ்தைக்குமுன் ப்ரளய தசையில் காரணாவஸ்தையோடு கூடின ஆதித்யாத்யுபாஸநத்தைத் தெரிவிக்கமாட்டா தென்பது உபநிஷத் பாஷ்யத்தி லுள்ள முதல் பக்ஷம். நமது வ்யாஸ கர்த்தாவும் இதையே ச்ருத ப்ரகாசிகா ஹ்ருதயமாகவும் கொண்டிருக்கிறார். ஸாவி ஸ்ருஷ்டிக்கு முன்நிலையையே மூல ச்ருதி போதிக்கிற தென்றும், இந்த ஸ்ருஷ்டிக்கு முன் நிலை ‘ஸ்ய’ சப்தத்தின் அர்த்த ஸ்வாரஸ்யத்திற்கு விருத்த மென்றும், இதுவே ச்ருதப்ரகாசிகையின் மர்ம மென்றும் இவர் எழுதிவைத்திருக்கிறார். ஆகவே: ச்ருதப்ரகாசிகையில் ‘ஸ்ருஷ்டிக்கு முன்னால்’ என்று அர்த்தம் பண்ணினதற்கு விருத்தமாகிறது. உபநிஷத் பாஷ்ய பக்ஷம் என்று இவர் எழுதியிருப்பது எப்படிப் பொருந்தும் ஸாவி ஸ்ருஷ்டிக்கு முன் நிலை என்று ச்ருதப்ரகாசிகை யாகில்? இந்த ஸ்ருஷ்டிக்கு முன் நிலை யன்று என்று உபநிஷத் பாஷ்யம் ச்ருத ப்ரகாசிக்கு மிகப் பொருந்திய தாகிறதே.

19. மத்வதிகரண ஸ்ரீ பாஷ்யத்திலேயே காரண சப்தமானது முக்த்யவஸ்த பரமாக ப்ரயுக்தமாயிருக்கிறது.

“ கார்யகாரணாவஸ்தாத்வயம் ப்ரஹ்மவாஸீந: ஸூர்யாதேர் வஸ்வாதிஸ்வம் ப்ராப்ய தத்பஶ்சாத் காரணம் பரம் ப்ரஹ்மவாப்நோதி ”

இங்கு, ‘காரணம் பரம்ப்ரஹ்ம’ என்பதற்கு, ‘ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளய தசையில் ஸூக்ஷ்ம சரீரகனை ஆதித்யனுக்கு அந்தர்யாமி ப்ரஹ்மம்’ என்பதாகப் பொருளன்றே. வஸ்வாதி பலாநுபவத்திற்குப் பிறகு முக்த்யவஸ்த ப்ரஹ்மத்தை அடைகிறான் என்பதாக வன்றோ பொருள்? ஆதித்யாதிகளுக்கு ஸூக்ஷ்ம ஸ்வாவஸ்த ப்ரஹ்மம் பரம ப்ராப்ய மன்றே? ப்ரளய தசையானது ஸம்ஸார நிலையே யன்றோ? ஆகவே ‘காரணம் பரம்ப்ரஹ்ம’ என்பது முக்த்யவஸ்தபரமே. இதற்கு முன் ‘காரணாவஸ்த’ சப்தமும் இதைப்போலவே முக்த்யவஸ்த பரமாகலா மன்றோ?. 1. மூல ச்ருதியில் ‘ஸ்ய’ சப்த ஸ்வாரஸ்யம்; 2. மேலே ச்லோகத்திலே எப்பொழுதும் உதயாதிக ளில்லை என்று சொல்லியிருப்பது; 3. ஸ்ரீ பாஷ்யத்திலே மேலே யுள்ள ‘காரணம்பரம் ப்ரஹ்ம’ என்று முக்த்யவஸ்தையில் ப்ரயோகம், 4. ‘ஸ்வாப்யய’ ஸூத்ர ச்ருத ப்ரகாசிகையில் காரணாவஸ்தத்வத்தை முக்யவஸ்தாஸாதாரண மென்று பரிஷ்கரித்திருப்பது; 5. சரீரேஹாவாதிகரணத்தின்படி மதுவித்யையிலும் முக்த்யவஸ்தோபாஸநத்தை ஸித்தாந்தத்தில் இசையவேண்டியிருப்பது; 6. த்வைதிகளும் அத்வைதிகளும் முக்தி நிலையைப்பற்றியதாகவே ‘ஸ்ய தத’ இத்யாதி ச்ருதிக்குப் பாஷ்ய மிட்டிருப்பது; 7. ப்ரவ்ருத்தி நிமித்த பரித்யாக மன்றியில், வ்யுத்பந்ந பதார்த்தத்தைப் போதிப்பது முக்யத்வம் என்ற ந்யாயபரிசுத்தியின்படி காரணாவஸ்த சப்தமானது

முக்த்யவஸ்தம் என்கிற அர்த்தத்தில் கௌண மன்றியே முக்யமாகை. ஆகிய இவை உபநிஷத் பாஷ்யத்தின் ப்ரதம பக்ஷத்திற்கு அநுகுணங்கள்.

வ்யாஸார்யருடையதாக அருளிய இரண்டாவது பக்ஷத்திலும் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்யமும், 'சுய' இத்யாதி மூல ச்ருதி நிர்வாஹமும் உபநிஷத் பாஷ்ய காரரே ஸமர்த்தநம் செய்திருக்கிறார். பக்ஷத்வயமும் ஸம்மதமே. யோஜநா பேத ப்ரதர்சநமாத்ரமே உபநிஷத் பாஷ்யத்தி லுள்ளது. ஸர்வத்ர ப்ரஸித்யதி கரண ஸ்ரீ பாஷ்யத்தின்படி முதல் யோசனையில் நோக்கில்லை; இரண்டாவது யோசனையே உபநிஷத் பாஷ்யகாராபிமதம் என்று கொண்டாலும் கொள்ள லாமே. 'சுவஷ்ரி தெறிதி காமகூதஃ' என்ற ந்யாயத்தின்படி கடைசி நிஷ்கர் ஷத்தை ஸித்தாந்த மாக்குவதும் உசிதமே.

20. 1. நமது ஸுஹ்ருத்துக்கு பக்ஷ த்வயத்தில் முதல் பக்ஷத்தை மாத்ரம் ப்ரசுரித்து விரோதம் காட்டுவதில் ருசியேற்பட்டதுபோலும். 2. ஹாவி ஸ்ருஷ்டிக்கு முன் நிலையேயே காரணாவஸ்தை யாக்கினமையால், இந்த ஸ்ருஷ் டிக்கு முன் நிலை 'சுய' மப்தார்த்த மன்று என்று உபநிஷத் பாஷ்யத்தின் ப்ரதம பக்ஷத்தை ஸ்தாபநமே செய்தார். 3. இவர் நினைத்த தூஷணமானது பூஷண மாய்த் தலைக்கட்டிற்று. 4. இரண்டு முறை வஸ்வாதி பத மிவர் பக்ஷத்திலே. 5. மதுவித்யையில் முக்த்யவஸ்தோபாஸந மிவர் இசையாமையால் நித்யஸம் ஸாரமே பலம். 6. கார்ய காரண சப்தங்களுக்கு பரஸ்பர ஸம்பந்திகளான அர்த் தங்களைப் போதிக்கும் ந்யாயத்திற்கு பாதநம். 7. ச்ருதப்ரகாசிகையில் 'ஸ்ருஷ்டே: வ வைஷம்' என்றிருக்க, அதைக் கீழே ப்ரக்ராந்த ஸ்ருஷ்டிக்குப் பரம் என்று வ்யாக்யாநம் செய்தல். இத்யாதிகளைப் பன்னி யுரைக்குங்கால் பாரதமாம். ஸஹ்ருதயா: ப்ரமாணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

* ஜந்மாதி லக்ஷண விவேசநம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு.]

ஸ்ரீ பாகவதம் முதல் ச்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ஸ்ரீ வீரராகவீயத் திலே, உபாதாந காரணத்வமானது ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மநிஷ்டம் என்றும், நிமித்த காரணத்வம் விசேஷ்ய பூத ஸ்வரூப நிஷ்டம் என்றும் உள்ளது. இதை ஆதாரமாகக் காட்டி நமது ஸம்பாதக ஸ்வாமி சென்ற மாதத்து ஸஞ்சிகையிலும், ஆவணி ஐப்பசி ஸஞ்சிகைகளிலும்

* ஜந்மாதி லக்ஷண விஷயமான விசாரம் இதோடு முற்றுப்பெற வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. ஸம்பாதகர்.

ஜந்மாதி லக்ஷணத்தின் பேரில் சில ஆக்ஷேபங்களை வெளியிட்டருளியிருக்கிறார். அவையாவன :—1. 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற லக்ஷண ஸூத்ரத்தில் உபாதான காரணத்வம் சொல்லியிருப்பது விபூதி விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கே யாகையால், அந்த ஸூத்ரத்தின்படி நிமித்த காரணத்வம் ஸித்திக்க வழியில்லையே. நிமித்த காரணத்வமானது விசிஷ்ட ப்ரஹ்ம நிஷ்டமன்றே; அது விசேஷ்ய பூத சுத்த ஸ்வரூப மாத்ர நிஷ்டமன்றோ?—முதல் ஆக்ஷேப மிது. 2. சுத்த ஸ்வரூப நிஷ்டமா யிராத உபாதான காரணத்வம் எப்படி லக்ஷணமாகும்? அஸாதாரண தர்ம மன்றோ அந்த வஸ்துவின் லக்ஷணமாகும்?—இரண்டாவது ஆக்ஷேபமிது. 3. 'யதோவா' இத்யாதி வாக்யமானது விபூதி விசிஷ்ட ப்ரஹ்மத்தைப் பற்றியதாகையால், அது ஜகதுபாதாநத்வத்தை மாத்ரம் ப்ரஸ்தாவிக்கிறது. 'ஸத்யம் ஜ்ஞாநம்' இத்யாதி வாக்யமானது குணங்களைப் பற்றியதாகையால், அது ஜகந்நிமித்தத்வத்தை ப்ரஸ்தாவிக்கிறது. ஆக ஒவ்வொரு லக்ஷண வாக்யமும் ஒவ்வொரு காரணத்வ மாத்ரத்தையே போதிக்கின்றமையால் இரண்டிலும் ந்யூநதை இருக்கிறதே! உபயவித காரணத்வத்தையும் போதிக்குமன்றோ பூர்ண லக்ஷணமாகும்? அப்படியிருக்க, வ்யாஸ பகவான் ஒன்றை விட்டு மற்றொன்றை விசேஷித்துக் கொள்ளக் காரணமொன்று மில்லையே.—இது மூன்றாவது ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபங்களுக்கு அடியேன் புரட்டாசி கார்த்திகை மாத ஸஞ்சிகைகளில் யதாமதி ஸமாதாநம் விஜ்ஞாபித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதே ஸந்தேஹத்தைச் சென்ற மார்கழி மாத ஸஞ்சிகையிலும் ஸ்வாமி வெளியிட்டு ஸமாதானிக்கும்படி நியமித்திருப்பதால், ஸ்வாமி ஸந்நிதியில் சற்று ஸவிஸ்தரமாக ஸமாதானத்தை விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்ளுகிறேன்.

முதல் ஆக்ஷேப ஸமாதாநம் :-

ஸ்ரீ பாகவத வ்யாக்யாநத்தில், நிமித்த காரணத்வமானது சுத்த ஸ்வரூப நிஷ்டமென்றதற்கு 'உபாதாநத்வோபயோகியான ஆகாரத்தைக்காட்டில் வேறுபட்ட ஆகாரத்தாலே நிமித்த காரணத்வம்' என்று தாத்பர்யமாக வேண்டும். (1) 'ஸத்யம் என்கிற ஸங்கல்ப விசிஷ்டனைக் கொண்டு ஈச்வரன் நிமித்தமாம்' என்று பரமத பங்கத்திலும், (2) 'ஸர்வ ஜ்ஞத்வாதி விசிஷ்டேநாகாரேணாபேக்ஷிதம் காரணம் நிமித்தம்' என்று ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலும், (3) 'ஸங்கல்ப விசிஷ்டவேஷேண நிமித்த காரணம்' என்று யதீந்த்ர மத தீபிகையிலும், (4) 'உபாதாநாகாரஹேதுவ்யவஹாரபூதத:' என்று அதிகரண ஸாராவளியிலும், (5) அதன் வ்யாக்யாநங்களிலும், (6) 'நிமித்த காரணத்வோபயோகி விசேஷணம் ஸத்ய ஸங்கல்பத்வம்' என்று ஜந்மாத்யதிகரண ச்ருதப்ரகாசிகையிலும், விசிஷ்டமே நிமித்த காரணமும் என்று ஸித்தாந்திதமா யுள்ளது. புரட்டாசி ஸஞ்சிகையில் இவற்றை உதாஹரித்துள்ளேன். ஆகவே, ஸூக்ஷ்ம சிதசித் வைசிஷ்ட்யத்தைத் தவிர்த்து ஆகாராந்தரத்தாலே நிமித்த காரணமாகிறான் ஈச்வரன் என்றே ஸ்ரீ பாகவத வ்யாக்யாந தாத்பர்யமும் கொள்ளவேண்டும். 'யதோவா' என்கிற ச்ருதியில் புரோவாதியான ஸத்வித்யாதி காரண வாக்யத்தை அநுஸரித்து உபயவித காரணத்வ

மும் போதிக்கப்படுகின்றது. ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டத்வாகாரத்தாலே உபாதாநமாகவும், ஸங்கல்ப விசிஷ்டமாய்க் கொண்டு நிமித்தமாகவும், ப்ரஹ்மம் ஆகிறது; இது ச்ருதியிலும் அதை விஷயமாகக் கொண்ட ஸூத்ரத்திலும் விவக்ஷிதம். நிமித்த காரணத்வோபயுக்தமான ஆகாரத்தையும் இங்கு 'யத:' என்று விவக்ஷிக்கையால் நிமித்த காரணத்வமும் ஸூத்ரத்திலும் மூலச்ருதியிலும் கொள்ளத் தட்டில்லையே. எந்த வஸ்துவானது ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டத்வாகாரத்தாலே உபாதாந காரணமாய், ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்த காரணமுமா யிராநின்றதோ அது ப்ரஹ்மம் என்பது திரண்ட பொருள். நிமித்த காரணத்வோபயுக்தமான ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தை ச்ருதி ஸூத்ரங்களி லுள்ள 'யத:' என்கிற பதங்களில் விவக்ஷிக்கக்கூடாதென்று தேறுமாகில், நிமித்த காரணத்வமானது இதில் ஸித்திக்க வழியில்லை என்று ஆக்ஷேபிக்க இடமுண்டு. உபாதாநத்வோபயுக்தமான ஸூக்ஷ்ம சிதசித் வைசிஷ்ட்யத்தை விவக்ஷிப்பதற்குள்ள ப்ரமாணோபபத்திகள் நிமித்தத்வோபயோகியான ஸங்கல்ப வைசிஷ்ட்யத்தை விவக்ஷிப்பதற்கும் துல்யமா யிருப்பதால் இந்த ஆக்ஷேபத்திற்கு இட மில்லை. இந்த ஸூத்ரத்தினுலும் 'யதோவா' என்கிற ச்ருதியினுலும் நிமித்த காரணத்வம் சொல்லுவதாகவும், அதற்கு உபயுக்தமான ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தை மாத்ரம் 'யத:' என்கிற பதங்கள் சொல்லுவதாகவும் கொண்டு, உபாதாந காரணத்வம் இதில் ஸித்திக்க வழியில்லையே யென்றும் ஆக்ஷேபம் செய்யலாகுமே. இந்த ஆக்ஷேபத்தை ஸமாதாநம் சொல்லும் ரீதியைக்கொண்டே நிமித்தத்வமும் ஸித்திக்கிறது.

ப்ரஹ்மமானது ஸூக்ஷ்ம சிதசித் வைசிஷ்ட்யம் பெறுமது ப்ரளய காலத்திலேயே. இக்காலத்தில் ஸ்தூல வைசிஷ்ட்யமே அதற் குள்ளது. பூர்வ நிலையில் ஸ்ருஷ்ட்யுபயோகியான ஸங்கல்ப வைசிஷ்ட்யமும் இருக்கின்றது. இவ்விரண்டு ஆகாரங்களில் முதல் ஆகாரத்தினுல் உபாதாநமும், இரண்டாவது ஆகாரத்தினுல் நிமித்தமு மாகிறது ப்ரஹ்மம். ஆகவே உபாதாநத்வம்போல் நிமித்தத்வமும் ஏன் ஸித்திக்க லாகாது ? நையாயிகாதிகளுக்குப்போல் நமது ஸித்தாந்தத்தில் நிமித்தோபாதாநத்வங்களுக்குப் பரஸ்பர விரோத மில்லை. அவிருத்தங்களானுலும் இந்த ச்ருதி ஸூத்ரங்களில் விவக்ஷிதம் உபாதாநத்வமாத்ரமே; நிமித்தத்வ மன்று என்பதற்கு ப்ராபக வாக்யம் பாதகமா யிராநின்றது. ப்ராபக வாக்யத்தில் உபயவித காரணத்வமும் விவக்ஷித மன்றோ? ஆகவே: ப்ராபக வாக்யத்தை அநுஸரித்து 'யதோவா' என்கிற ச்ருதியில் இரண்டு வித காரணத்வமும், அதற்கு உபயுக்தங்களான ஆகாரங்களும் ஸித்திக்கின்றமையால், ஸூக்ஷ்ம சிதசித் வைசிஷ்ட்யத்தாலே ப்ரஹ்மமானது உபாதாந காரணமாய், ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்த காரணமாய் 'யதோவா' என்கிற ச்ருதியிலும், அதை விஷயமாகக் கொண்ட ஜந்மாதி ஸூத்ரத்திலும் ஸித்திக்கிறது.

இரண்டாவது ஆக்ஷேப ஸமாதாநம்:—

'சுத்த ஸ்வரூப நிஷ்டமாயிராத உபாதாந காரணத்வம் எப்படி லக்ஷணமாகும்? அஸாதாரண தர்ம மன்றோ லக்ஷணம்?' என்பதாக மற்றோர்

ஆக்ஷேபத்திற்கும் முன்பே ஸமாதாநம் விஜ்ஞாபித்திருக்கிறேன். அதாவது:— சுத்த ஸ்வரூபத்திற்கும் காரணத்வ முண்டு என்பது ஜந்மாத்யதிகரண ச்ருதப்ர காசிகையிலேயே யுள்ளது. 'ஜமஜந்மாதிநாவமதஸ்வரூபம் வஸ்து' என்பது ஸ்ரீ பாஷ்யம். 'சுவமதஸ்வரூபம் = சுவமதாஸாதாரணாகாரம்; வஸ்து = விஶேஷ்யஸ்வரூபம்' என்பது ச்ருதப்ராகாசிகை. இதனால் உபாதாந காரணத்வ மானது விசேஷ்யாம்சத்திற்கு அஸாதாரணாகாரம் என்றே ஏற்படுகிறது. 'கூஸ்நஸ்ய ஜமதோபாதாநகாயதயா' என்கிற ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யாந ச்ருதப்ரகாசிகையிலும் விசேஷ்யாம்சத்துக்கு உபாதாந காரணத்வம் ஸ்பஷ்டமா யுள்ளது. உபலக்ஷண மெல்லாம் விசேஷ்யத்தி லிருக்கக் கூடாது என்கிற நியம மில்லை. ஸாரஸ ஸம்பந்தமானது உபலக்ஷணமாய் தேவதத்த கேதார வ்ருத்தியு மாச்சுதே. 'ரூபவாந், ரஸவாந்' என்கிற விடத்தில் ரூபமானது விசேஷ்யாந்வயம் பெற்றிருந்தும், உபலக்ஷண மென்று வ்யுத்பத்தி வாதத்திலே பட்டாசார்யர் பணிதி. இங்கு ரஸம் விதேயம்; அதோடு ரூபமானது அந்வயம் பெறவில்லை. அதனால் அது உபலக்ஷண மென்றார். விஶேஷ்யாந்வய மிங்கு உபலக்ஷணமான ரூபத்திற்கு உண்டு.

விசேஷ்யம் அந்வயம் பெறுமிடத்தில் அந்த விதேயத்தில் தானும் ஸம்பந் தம் பெற்று வ்யாவர்த்தகமா யிருப்பது விசேஷணம்; விசேஷ்யாந்வயியான விதேயத்தோடு ஸம்பந்தம் பெறுமல் வ்யாவர்த்தகமா யுள்ளது உபலக்ஷணம் என்று இதுவே விசேஷணோபலக்ஷண ஸ்வரூப நிஷ்கர்ஷம். இவ்வாறுகவே, 'ஶோக்ஷாயெ ஶாவாஸ்தீஹெதெ ஹுத்ஸயஶவிஸஶஹ்நேதி விஶஸ்தாவிகஸ்ஸாக' என்று ஜந்மாத்யதிகரண ஸாராவளியில் ஸ்ரீ தேசிகன் நிஷ்கர்ஷித்தருளுகிறார். 'ஊதமெ கூயஶ ஸாஶாநதாக' என்கிற குணோபஸம்ஹாரபாத ஸூத்ர ச்ருதப்ரகாசிகை யிலும் இந்நிஷ்கர்ஷமே யுள்ளது. நயமயூக மாலிகையில் தீக்ஷிதரும் இதையே கொண்டார். அத்வைத பரிபாஷை முதலானவற்றிலும் இப்படியே நிர்கர்ஷ முள்ளது. ப்ரஹ்ம லக்ஷணமான காரணத்வமானது உபாஸநத்திலும் எங்கு அந்வயம் பெறுகிறதோ, அங்கு அதை விசேஷண மென்கிறது. எங்கு ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிவதற்கு மாத்ரம் உபயுக்தமாய் உபாஸநத்தில் அந்வயம் பெற வில்லையோ, அங்கு அது உபலக்ஷண மென்கிறது. இதுவே ஸ்ரீ தேசிகன் ச்ருதப்ரகாசிகாசார்யர் முதலிய ஆசார்யர்களும் மதாந்தஸ்தரும் காட்டிய நிஷ்கர்ஷம். ஆகவே உபலக்ஷணமான காரணத்வமானது அஸாதாரண தர்ம மாகத் தட்டில்லை. விசேஷ்ய நிஷ்டமா யிராதது உபலக்ஷணம் என்கிற பக்ஷத் தில் காரணத்வத்தை உபலக்ஷண மென்று கொள்ளவில்லை. காரணத்வமானது விசேஷ்ய நிஷ்ட மாகையால் அது விசேஷணமே. ப்ரபஞ்சகதமான ஜந்மாதியை லக்ஷண மாக்கினல் அது ப்ரஹ்ம நிஷ்ட மல்லாமையாலே உபலக்ஷ ணம். ஜந்மாதி காரணத்வத்தை லக்ஷணமாக்கினல் அது ப்ரஹ்ம நிஷ்டமாகை யால் விசேஷணமே என்பதாகப் பாராசர்ய விஜயத்திலே மஹாசார்யர் நிஷ் கர்ஷம் செய்தருளினர். ஸ்ரீ பாகவத வ்யாக்யாதாவும் இதையே மேலே ஸ்வஸித்தாந்த மாக்கினர்.

“விஶேஷ்யநிஷ்டத்வாநிஷ்டத்வாப்யாம் விஶேஷணத்வோபலக்ஷணத்வயோர்ஹேது:, ததஶ்ச காரணத்வஸ்ய ப்ரஹ்மநிஷ்டதயா விஶேஷணத்வம், ஏவம் ச ஜகஜ்ஜந்மாதேர் ப்ரஹ்மஸ்வரூபாநிஷ்டதயோபலக்ஷணத்வமிதி விபாவநீயம்”

என்று காரணத்வமானது ப்ரம்ஹ ஸ்வரூப நிஷ்ட மென்றும், ஸ்வரூபத்திற்கு அது விசேஷணமே என்றும், ஜந்மாதி தர்மமானது ப்ரஹ்ம ஸ்வரூப நிஷ்ட மன்று ப்ரபஞ்ச நிஷ்ட மாகையால் அது உபலக்ஷண மென்றும், காரணத்வத்தை ப்ரஹ்ம ஸ்வரூப நிஷ்டமாய் விசேஷண மென்று பக்ஷாந்தரத்தை ப்ரதர்ஶநம் பண்ணியிருப்பது ப்ரக்ருதோபயுக்த மானது. ஆகவே விசேஷ்ய நிஷ்ட மல்லாதது உபலக்ஷணம் என்கிற பக்ஷத்திலே காரணத்வம் விஶேஷ்ய நிஷ்ட மாகையால் விஶேஷணமே யன்றி உபலக்ஷண மில்லை. முன் காட்டிய ஸ்ரீ தேசிகாதி ஸித்தாந்தத்தின்படி விசேஷ்யாந்வயியா யிருக்கச் செய்தே உபாஸநாந்வய தத்பாவங்களை யிட்டுக் காரணத்வத்திற்கு விசேஷணத்வமும் உபலக்ஷணத்வமும்; ஆகவே சுத்த ஸ்வரூப நிஷ்டமாயிராத உபாதாந காரணத்வம் எப்படி லக்ஷணமாகும் என்கிற இரண்டாவது ஆக்ஷேபத்திற்கு இடமில்லை.

மூன்றாவது ஆக்ஷேப ஸமாதாநம்:—

‘யதோவா’ இத்யாதி வாக்யமானது விசிஷ்ட ப்ரஹ்மத்தைப் பற்றிய தாகையால் உபாதாநத்வத்தை மாத்ரம் சொல்லுகிறது. ‘ஸத்யம் ஜ்ஞாநம்’ இத்யாதியானது குணங்களைப்பற்றிய தாகையால் நிமித்தத்வத்தை மாத்ரம் சொல்லுகிறது. உபய காரணத்வமும் சேர்ந்து ஒரு வாக்யத்தால் போதித மன்றே. இரண்டிலும் ந்யூநதை இருக்க ‘ஸத்யம் ஜ்ஞாநம்’ இத்யாதியை விட்டு ‘யதோவா’ என்பதை ஸூத்ரகாரர் ஆதரிப்பானேன்?—இது மூன்றாவது ஆக்ஷேபம்.

‘யதோவா’ என்பது விசிஷ்ட ப்ரஹ்மத்தைப் பற்றியதே. ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டத்வத்தையும் ஸங்கல்ப விசிஷ்டத்தையும் பற்றிய தாகையால், முதல் ஆகாரத்தினாலே உபாதாநமாய் இரண்டாவது ஆகாரத்தினாலே நிமித்தமாயு மாகிறது. ஆகவே உபாதாநத்வத்தைப் போலவே நிமித்தத்வத்தையும் அது சொல்லுகிறது. ‘ஸத்யம் ஜ்ஞாநம்’ இத்யாதி வாக்யம் காரணத்வ போதக மாகமாட்டாது. ‘யத:’ என்று ஹேது பஞ்சமி யிருப்பதால் உபயவித காரணத்வம் விவக்ஷிதமாகிறது. ‘ஸத்யம் ஜ்ஞாநம்’ இத்யாதி காரணத்வபரமாக என்ன ப்ரஸக்தி? சாப்தமாக இராவிட்டாலும் ஸத்யத்வாதி குணங்களால் நிமித்தத்வத்தை ஏன் ஆக்ஷேபிக்கக்கூடாது என்பது ஸ்வாமியின் திருவுள்ளமாகில், ஸத்யாதி வாக்யமானது நிமித்த காரணத்வத்தைச் சொல்லுகிறதாகமாட்டாது வாச்ய மன்றே? மேலும் ஸ்வரூப நிரூபகங்களான ஸத்யத்வாதி குணங்கள் ஐந்தும் ப்ரஹ்மத்தினிடம் ஸர்வ காலமு முண்டு. நிமித்த காரணத்வமானது ஸ்தூல ஸ்ருஷ்டிக்குப் பூர்வமே யுள்ளது. இந்தக் குணங்களுக்கும் நிமித்த காரணத்வத்திற்கும் பரஸ்பரம் கார்ய காரண பாவமு மில்லை. ஆகவே

நிமித்த காரணத்வமானது சாப்தமாகவோ ஆர்த்தமாகவோ ஸத்யாதி வாக்யத்தால் ஸித்திக்கமாட்டாது. சோதக வாக்ய மிது. பூர்ண காரணத்வம் ப்ரஸ்துதமாய் அதனுல் ஏற்படக்கூடிய அவத்யத்தை நிவர்த்திக்கின்றது இது. ஸத்யத்வாதிகளை ஆர்த்தமாகவும், காரணத்வங்கள் இரண்டையும் சாப்தமாகவும் கொண்டு ஸூத்ரக்காரர் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்று லக்ஷணம் செய்ததற்கு ப்ரமாணோபபத்திகளை ஏற்கெனவே கார்த்திகை மாதத்து ஸஞ்சிகையில் ஸவிஸ்தரமாக நிரூபித்திருக்கிறேன்.

ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட வேஷத்தாலே உபாதானமும், ஸங்கல்ப விசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமு மாகிறது ப்ரஹ்மம். இப்படி உபயவித காரணத்வமும் 'யதோவா இமானி' என்கிற ச்ருதியினுலேயே ப்ரதிபந்ந மாவதால், இது பூர்ண லக்ஷணமாகிறது; ந்யூநதை யில்லை. இதை உபஜீவித்து சோதகமான ஸத்யாதி வாக்யம் ப்ரவர்த்திக்கின்றது. ஆகவே: அதை ஆர்த்தமாகவும் உபஜீவ்யமான உபயவித காரணத்வத்தை சாப்தமாகவும் கொண்டு ஸூத்ர ப்ரணயநம் செய்தது ஸுஸங்கதமே யாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஜந்மாதி லக்ஷண விவேசநம்

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

—————:O:—————

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சென்ற மார்கழி மாஸத்து ஸஞ்சிகையில், மேற்கண்ட விஷயமாக ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி மற்றேர் ஸந்தேஹத்தை வெளியிட்டிருக்கிருர். அதைப்பற்றிச் சிறிது விஜ்ஞாபநம் செய்யவேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே முன் ஸஞ்சிகைகளில் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ப்ரஹ்ம ஸூத்ரமும், அதற்கு விஷய வாக்யமான 'யதோவா இமானி' இத்யாதி ச்ருதி வாக்யமும், ப்ரஹ்மம் ஜகதுபாதாந காரணம் என்று மாத்ரம் கூறுவதாகவும், ஜகத்துக்கு ப்ரஹ்மம் நிமித்த காரணம் என்ற விஷயம் 'ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்' என்கிற ச்ருதி வாக்யத்தினுல்தான் ஏற்படுகிற தென்றும், ஆகையால் ஸ்ரீ பாதராயணர் இந்த ச்ருதி வாக்யத்தை அநாதரித்து உபாதாந காரணத்வத்தை மட்டில் ப்ரதிபாதிக்கும் ஷை 'யதோவா இமானி' இத்யாதி ச்ருதி வாக்யத்தை அவலம்பித்து, காரணத்வ லக்ஷணம் கூறியிருப்பது பூர்த்தியுள்ள தல்ல வென்கிற ஆக்ஷேபம் ஸம்பாதக ஸ்வாமியால் வெளியிடப்பட்டிருந்தது. அதற்கு நான் எழுதியுள்ள ஸமாதாநம், ஷை மார்கழிமீ ஸஞ்சிகையிலேயே 313-315-ம் பக்கங்களில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரமும், அதின் விஷய வாக்யமும், உபாதாந நிமித்த ஸஹகாரி

தாக ஸம்பாதக ஸ்வாமியின் குறிப்பிலிருந்து ஒருவாறுகத் தெரியவருகிறது. அப்படிக்கிருந்தும், அவ்விஷயம் ஸம்பந்தமாகவே மற்றொரு ஸந்தேஹம் ஷெ ஸம்பாதகரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—ஷெ ப்ரஹ்ம ஸூத்ரத்தின் அநுவாதமாகிய ஸ்ரீ பாகவத ப்ரதம ச்லோகத்தின் முதலிலுள்ள ‘ജന്മാദ്യസ്യ യതഃ’ இத்யாதியின் வ்யாக்யாநாவஸரத்தில் தத்வ்யாக்யதாவாகிய ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமி ‘சந்த்ரிகா’ என்ற தமது வ்யாக்யாநத்தில் சொல்லியிருக்கும் விஷயத்தையே தாம் அநுவாதம் செய்வதாகவும், அதிலிருந்தே ஷெ ஸந்தேஹம் உத்தாபித மாகிறதென்றும், ஸம்பாதக ஸ்வாமியால் சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சற்றுப் பராமர்சிக்கவேண்டியது அவச்யமாகிறது.

இந்த கட்டத்தில் வீரராகவீய வ்யாக்யாநத்தில் சொல்லப்பட்ட விஷயம் ஸ்ரீ பாஷ்யத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதின் அநுவாத மாகையால், அந்த ஸ்வாமியால் புதிதாக ஒன்றும் சொல்லப்படவில்லை. ப்ரஹ்மம் நிர்விசேஷ மாகையால், அது விசேஷண ரூபமான லக்ஷணத்தினுலாவது உபலக்ஷண ரூபமான லக்ஷணத்தினுலாவது குறிக்கத் தகுதியுள்ளதல்ல வென்கிற அத்வைதிகளின் ஆக்ஷேபத்தை ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர், ‘ജന്മാദ്യസ്യ യതഃ’ என்கிற லக்ஷணம் ஷெ உபய வித கோடியிலும் பொருந்தும் என்பதை நிஸ்ஸம்சயமாய் ஸ்தாபித்திருக்கிறுர். லக்ஷ்யத்துக்கு, (அதாவது: குறிப்பிட உத்தேசிக்கும் பதார்த்த விசேஷத்துக்கு) இதர பதார்த்தங்களிலிருந்து வ்யாவர்த்தகாகாரத்தை [அதாவது: பகுத்துக் காட்டும் ப்ரகாரத்தை] விவரணம் செய்வது லக்ஷணத்தின் ஸ்வரூபம். இது ‘ഉപലക്ഷണതയാ ലക്ഷണം’ என்றும், ‘விசேஷணതയാ ലക്ഷണം’ என்றும் இரு வகைப்பட்டது. உபலக்ஷணம் என்கிற சப்தத்தினுலேயே அது, [ഉപ–സമീപേ വൎത്തമാനം സത് ലക്ഷയതി ലക്ഷ്യം സൂചയതി] லக்ஷ்ய பதார்த்த நிஷ்டமல்ல; கிந்து, தத்ஸமீப வர்த்தியா யிருந்து அதை நாம் பகுத்தறிவதற்கு உபகரிக்கிறது என்று ஏற்படுகிறது. ‘യത്രായം സാരസഃ സ ഏവ ദേവദത്തകേദാരഃ’ என்பதை இதற்கு ஸாதாரணமாய் உதாஹரணமாகக் கூறுவது வழக்கம். அதாவது: தேவதத்தன் என்பவனுக்குச் சொந்தமான வயலை ஒருவன், அதை யறியாத மற்றொருவனுக்குக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக, ‘இதோ ஸாரஸ பக்ஷி யிருக்கிறதே அது தான் தேவதத்தனின் வயல்’ என்று சொன்னுல், ஸாரஸம் தேவதத்தனின் வயலுக்கு உபலக்ஷண மாகிறது. அது ஷெ வயலில் நித்ய ஸம்பந்த முள்ளதல்ல. அதிலிருந்து பிரிந்து நின்றபோதிலும் அதன் ஸமீபத்தி லிருப்பதால், அதை யறிவதற்கு ஸாதக மாகிறது. இதல்லாமல் மற்றொரு விதமாகவும் அவ்வயலை யறியலாம். அதாவது: ‘യോഽയമന്യേഭ്യോ നിമ്നതരഃ സ ഏവ ദേവദത്തകേദാരഃ’ [இதோ மற்ற வயல்களைக்காட்டிலும் அதிக பள்ளமா யிருக்கிறதே இதுதான் தேவதத்தனுடைய வயல்] என்று ஒருவன் சொன்னுல், அப்போது பள்ளமா யிருப்பிய காரணங்களையுமே விவக்ஷிக்கின்றன வென்று உபபத்தியுடன் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு அவ்வித ஸம்சயம் சாந்தமாய்விட்ட

பது வயலின் ஸ்வரூபத்தில் நித்யமாய்ச் சேர்ந்த தாகையால், அது விசேஷண ரூபமான லக்ஷண மாகிறது. அதாவது: அப்ருதக்ஸித்தமா யிருந்து லக்ஷ்யத்தைக் குறிப்பது 'விஶேஷண தயா லக்ஷண' மென்றும், ப்ருதக்ஸித்தமா யிருந்து லக்ஷ்யத்தைக் குறிப்பது 'உபலக்ஷண தயா லக்ஷண' மென்றும் இவ்விரண்டுக்கும் விபாகம். இங்கு லக்ஷண மென்பதற்கு ஸூசகம், (அதாவது: குறிப்பிட ஸாதகமாயிருப்பது) என்பது பொருள். ஆகவே, ஜகத்தினுடைய ஜந்மாதிகள் விஶுத்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் சேர்ந்ததல்ல வாகையால், அவை ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபலக்ஷணதயா குறிக்கின்றன. அதாவது: 'ஜமஜ்ஜந்மாதேः யத்காரணம் தத்ப்ரஹ்ம' என்பதால், ஜகத்தின் உத்பத்தி முதலிய அவஸ்தா பேதங்களைக் கொண்டு அவற்றின் காரணமான ப்ரஹ்ம ஸ்வரூபம், ஸாரஸ பக்ஷியைக்கொண்டு அதன் ஸமீபத்தி லுள்ள தேவதத்தன் வயல்போல் அறியப்படுகிறது. இவ்வகையான உபலக்ஷண உபலக்ஷ்யபாவம், (அதாவது: ஜகஜ்ஜந்மாதியானது உபலக்ஷணமா யிருந்து விஶுத்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தை உபலக்ஷ்யமாக ஸூசிப்பது) உபாதாந நிமித்த ரூபமான இருவித காரணத்வத்துக்கும் துல்யம். ஆனால் சுத்த ப்ரஹ்மத்துக்கு ஜகதுபாதாந காரணத்வம் ஸத்வாரகம். அதாவது: தச்சரீர பூதமான சிதசித்ரூப ப்ரபஞ்ச த்வாராவாக ஸித்திக்கிறது. நிமித்த காரணத்வம் 'பஹுஸ்யாம்' என்கிற ஸங்கல்ப ப்ரயுக்த மாகையால் அத்வாரகமாகவே ஸித்திக்கிறது. ஆகையால் 'ஜந்மாத்யஸ்ய யதः' என்கிற லக்ஷணத்தால், வ்யாஸ பகவான் ஒன்றை விட்டு மற்றொன்றைப் பரிக்ரஹித்தார் என்று குறைகூற இடமே கிடையாது. இவையெல்லாம் வீரராகவீயத்திலேயே ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தால் காரணத்வ ஸாமாந்யம், அதாவது: நிமித்தோபாதாந ரூப உபயவித காரணத்வமும் ப்ரஹ்மநிஷ்ட மாகையால், விசேஷண கோடியில் சேர்ந்ததென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், லக்ஷண ந்யூநதை யொன்றுக்கும் ப்ரஸக்தி யில்லை. உபாதாந காரணத்வம் அத்வாரகமாக விஶிஷ்டப்ரஹ்ம நிஷ்டம். ஸத்வாரகமாக விசுத்த ஸ்வரூப நிஷ்டம். நிமித்த காரணத்வம் அத்வாரகமாகவே விசுத்த ஸ்வரூப நிஷ்டம் என்பதுதான் தீர்ந்த நிர்ணயம். மேலும், வீரராகவீய வாக்யங்களில் சில பாடப் பிழைகள் இருப்பனவாகத் தெரிகிறது. அதில் 'ஜமஜ்ஜந்மாதேः' என்றிருக்க வேண்டியதற்குப் பதிலாக 'ஜம த்காரணத்வஸ்ய' என்று அச்சு ப்ரதியில் காணப்படுகிறது. இது தவறென்று மேல் வாக்யங்களால் விளங்குகிறது. அர்த்த ஸ்வபாவத்துக்கும் அது இசையாது. ஒருகால் ஷை அபபாடம் இந்த ஶங்கைக்கு ஆஸ்பதமா யிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. வீரராகவீயத்திலேயே மூன்றுவது பக்கத்தில்,

" ஸாவ்யவஸ்தாவிஶேஷவதः ப்ரஹ்மவஸ்துநோ மிக்ஷஸாதாரணத்வம், நிமித்தத்வம் நாஸகதஸ்ரத்வம், ஏவம் ஆநநத்ர ஜமஜ்ஜந்மாதீநு ப்ரத்யஸாதாரணத்வ நிமித்தத்வ ரூபோபாதயவிய காரணத்வம் ப்ரஹ்மணோ லக்ஷணம் விவக்ஷிதம் ॥ "

என்று நிர்ணயம் கண்டோக்தமாய்க் காணப்படுகிறது. இதுவும் மேலே கூறப்பட்ட ஸமாதாநத்தை த்ருடீகரிக்கிறது.

இவ்விஷயத்தில் ஸம்பாதக ஸ்வாமி தமது ஸந்தேஹத்தைக் குறிப்பிடும் வாக்யாநுபூர்வி பின் வருமாறு:— "உபலக்ஷகமா யிருப்பதற்குத் தர்மி நிஷ்டத்வ மில்லை யாதலால், இரண்டு லக்ஷணங்களும் ஒரு அம்ஸத்தில் அஸாதாரண தர்ம கடித மில்லை. ஆதலால் அவை ஒருவிதமான ந்யூநதையை உடைத்தாயிருக்கின்றன வென்றே சொல்லவேண்டும். அப்பொழுது ஒன்றை த்யஜித்து மற்றொன்றை ஸ்ரீ வ்யாஸ பகவான் க்ரஹிப்பதற்கு ஹேதுவில்லையே. இதுதான் ஸந்தேஹம்" என்பது. இதன் தாத்பர்யம் நன்கு விளங்கவில்லை. 'இரண்டு லக்ஷணங்களும் ஒரு அம்ஸத்தில் அஸாதாரண கடித மில்லை' என்பதால் லக்ஷ்ய வஸ்துவில் இவைக ளிரண்டிற்கும் ஸாமாநாதிகரண்ய மில்லை யென்பது விவக்ஷிதமானால் அது ஒரு ஆக்ஷேப மாகமாட்டாது. உபலக்ஷணத்தின் ஸ்வரூபமே லக்ஷ்யாநிஷ்டத்வ மாகையால், லக்ஷ்யா ப்ருதக்ஸித்தமான விஸேஷணத்துக்கும் அதற்கும் அஸாமாநாதிகரண்யம் ஸ்வதஸ்ஸித்தம். இதை ஆக்ஷேப விஷயமாக்க ந்யாய மில்லை. வேறு விதமாக ஷி வாக்யத்தைப் பொருள் கொள்ள எனக்குத் தெரியவில்லை. ஸ்ரீ பாஷ்யத்திலும் தததுஸாரியான வீர ராகவீயத்திலும், 'உபலக்ஷணதயா விஸேஷணதயாऽ ஜந்மாதி இத்யாதி ஸூத்ரம் ப்ரஹ்மத்துக்குப் பொருந்திய லக்ஷணமாகிறது' என்று நிர்ணயிக்கப் பட்ட பிறகு, வ்யாஸ பகவான் ஒன்றை த்யஜித்து மற்றொன்றை க்ரஹித்ததாகச் சொல்வதற்கு ப்ரஸக்தி யிருப்பதாகத் தெரியவில்லை யென்று விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீஸைலகொவாஸா நுஜ யதீந்த்ர மஹாதேஸிகாய நம:

நற் போதுபோக்கு

[ஸ்ரீ. உப. கோ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

[பெருமாளும் பிராட்டியும்]

பெரிய பிராட்டியாராகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மி ப்ருகு மஹர்ஷிக்குத் தமது பார்யையான க்யாதியினிடம் பிறந்தவ ளென்றும், அம்ருத மதந காலத்தில் பாற்கடலில் பிறந்தவ ளென்றும் புராணங்கள் கூறும். எனினும் லோகமாதாவான பிராட்டி என்றென்றைக்கும் எம்பெருமானோடு பிரிவற்றவளாய் நித்யையாய் இருக்கின்றவளே யன்றி ஜநநாதிகள் உள்ளவ ளன்று. எம்பெருமானைப்போல் அவளும் அவதரிப்பதும் மறைவதுமா யிருப்பாள். எம்பெருமான் விபுவாய், எங்

கும் நிறைந்து, ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் முதலிய ஸகல கல்யாண குணங்களுடன் விளங்குவது போலவே, பிராட்டியும் அவ்வாறே விளங்குவள். இப்படி ஸகல பூதங்களுக்கும் தாயும் தந்தையுமான இந்த ஶரண்ய தம்பதிகளின் மஹா விபூதி வைபவம் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

பதத்துக்குப் பொருள் அந்தப் பெருமாள் ; அந்தப் பொருளைத் தெரிவிக்கும் பதம் பிராட்டி.

இப்படியே நீதி இவள்; அந்நீதியின் உபாயமான நயம் அவன்.

இவள் புத்தி; அப்புத்தியால் ஆகும் போதம் அவள்.

தர்மம் ஸ்ரீமந் நாராயணன் ; அந்தத் தர்மத்துக்கு ஸாதகமான ஸத்க்ரியை பத்மாலயை.

ஸ்ருஷ்டிக்கிறவன் ஸ்ரீ விஷ்ணு தேவன் ; அந்த ஸ்ருஷ்டி ஶக்தி ஸ்ரீதேவி.

இவள் பூமி ; இந்தப் பூமியைத் தரிப்பவன் எம்பெருமான்.

அந்தப் பகவான் ஸந்தோஷம் ; அந்த ஸந்தோஷத்தை உண்டாக்கும் ஸந்துஷ்டி இந்தப் பிராட்டி.

இச்சை என்பது ஸ்ரீதேவி ; காமம் என்பது பகவான்.

யஜ்ஞமானது ஸ்ரீ மாதவன் ; தக்ஷிணையானது ஜகந்மாதா.

புரோடாஶம் ஸ்ரீ ஜநார்த்தநன் ; ஆஜ்யாஹுதியானது கமலை.

ப்ராக்வம்ஶ மென்பது மதுஸூதநன் ; பத்நிஶாலை என்பது ஸ்ரீதேவி.

யூபஸ்தம்பம் ஸ்ரீ ஹரி ; யாகஶயநம் ஸ்ரீ லக்ஷ்மி.

எம்பெருமான் தர்ப்பம் ; பிராட்டி ஸமித்து.

ஸாம வேதம் ஸ்ரீ பகவான் ; அதிற் சேர்ந்த உத்கீதி என்பது ஸ்ரீ லக்ஷ்மி.

ஜகத்பதியான ஸ்ரீ வாஸுதேவன் அக்நி பகவான் ; இந்திரையானவள் ஸ்வாஹாதேவி.

ஸ்ரீ விஷ்ணு பகவான் ஶங்கரன் ; ஸ்ரீ மஹா லக்ஷ்மி கௌரி தேவி.

கேஶவனே ஸூர்யன் ; அந்த ஸூர்யனுடைய ப்ரபை கமலை.

எம்பெருமான் பித்ருதேவதா ஸ்வரூபி ; ஸ்ரீதேவி ஸ்வதா ஸ்வரூபி.

ஜகந்மாதாவான ஸ்ரீ மஹா லக்ஷ்மி ஆகாஶம் ; அதிவிஸ்தாரமான அதன் பரப்பே ஸ்ரீ மஹா விஷ்ணு.

ஸ்ரிய: பதியே சந்த்ரன் ; அச்சந்த்ரனின் காந்தியாகிய நிலவே ஸ்ரீதேவி.

ஸர்வகதனாகிய ஸ்ரீ ஹரியே வாயு; மேகாதிகளைத் தரிக்கத்தக்க அக்காற்றின் செய்கையே திருமகள்.

ஸமுத்ரம் ஸ்ரீ கோவிந்தன்; ஸ்ரீ தேவி அச்சமுத்ரத்தின் அலை முதலான விக்ருதி.

மதுஸூதநனே தேவேந்த்ரன்; இந்திரையே இந்திராணி.

சக்ரதரனான பகவானே யமன்; கமாலாலயையே யம பத்னியான தூர்மோரணை.

ஸ்ரீதரனான தேவனே குபேரன்; ஸ்ரீதேவியே அக்குபேரனுடைய செல்வம்.

கேஶவனே வருணன்; லக்ஷ்மியே வருண பத்னியான கௌரி.

கோவிந்தனே தேவஸேநாபதியான ஸ்கந்தன்; லக்ஷ்மீ தேவியே தேவஸேனை.

கதாதரனே பிடிப்பு; அதற்குக் காரணமான ஶக்தியே ஸ்ரீதேவி.

நிமிஷ ஸ்வரூபம் நாராயணன்; காஷ்டையின் ஸ்வரூபம் லக்ஷ்மி.

முஹூர்த்தம் ஸ்ரீவாஸுதேவன்; அம்முஹூர்த்தத்தின் அவயவமான கலை ஸ்ரீ லோகமாதா.

திருவிளக்கு ஸர்வேச்வரன்; அதன் காந்தி லோகநாயகி.

ஸ்ரீ மஹா விஷ்ணு வ்ருக்ஷம்; ஸ்ரீதேவி அதன் கொடி.

சக்ரதரன் பகல்; ஸ்ரீகாந்தை ராத்ரி.

வரப்ரதனான விஷ்ணுவே மணமகன்; தாமரையாள் மணமகள்.

பகவான் நத ஸ்வரூபன்; ஸ்ரீதேவி நதி ஸ்வரூபை.

புண்டரீகாக்ஷனான பெருமாள் அரசருடைய கொடி; புண்டரீகவல்லி அதன் கொடிச் சீலை.

லோகேச்வரனான நாராயணன் லோபம்; லோகேச்வரியான லக்ஷ்மி ஆசை.

கோவிந்தன் ராகம்; ஸ்ரீ தேவி அதன் காரணமாகிய காதல்.

தமிழ்நாடு ... காப்பக
189255

இப்படி, தேவதைகளுக்குள்ளும், மனிதர்களுக்குள்ளும், திர்யக்குகளுக்குள்ளும், மற்றுமுள்ள வஸ்துக்களுக்குள்ளும், புல்லிங்கமான பேருடைய பதார்த்தங்களெல்லாம் ஷாட்குண்ய பரிபூர்ணனான ஸ்ரீ ஹரியாவன்; அப்படியே ஸ்த்ரீலிங்கமான பேருடைய பதார்த்தங்கள் யாவும் ஸ்ரீ மஹா லக்ஷ்மி. * இவ்விருவரினும் வேறான வஸ்து ஒன்றுமில்லை. எல்லாம் அவர்களால் வ்யாபிக்கப்பட்டு அவர்களுடைய விபூதியாகவே விளங்குகின்றன.

—ஸ்ரீ விஷ்ணு புராணம்

* ஸகலமும் திவ்ய தம்பதிகளுடைய விபூதியா யிருந்தாலும், சில பொருள்கள் எம்பெருமான் விபூதியாகவும், சில பொருள்கள் எம்பெருமாட்டி விபூதியாகவும் அருளிச் செய்தது, அவற்றில் அவர்களுடைய விசேஷ ஸாந்நித்யத்தாலே என்றறியவேண்டும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ அஹோபில மடத்து 40, 41-வது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர்களின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள்

—:—

ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளி யிருந்த 40-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கருடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், நிகழும் ஸர்வதாரி௵ மார்கழி௴ 13௳ திங்கட்கிழமை யன்றும், ஷை ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கருடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், மார்கழி௴ 22௳ புதன் கிழமை யன்றும், பெருமாள் கோவில், திருவல்லிக்கேணி, தேரழுந்தூர் முதலிய திவ்ய தேசத்து மடங்களிலும், நாதூரில் ஸ்ரீ பரந்தூர் அழகியசிங்கர் ப்ருந்தாவநத்திலும், மிக்க ஸம்ப்ரமத்துடன் நடைபெற்றன வென்று (முறையே) அழிசூர் வித்வான் ஸ்ரீ. உப. திருமலாசார்யர், காளி கனபாடி ஸ்ரீ. உப. க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸபைக் கார்யதர்ஶி ஸ்ரீ. உப. கிடாம்பி நரஸிம்ஹாசார்யர், ஸ்ரீ. உப. வா. ஸ்ரீரங்காசார்யர் முதலிய ஸ்வாமிகள் அறிவிக்கிறார்கள்.

* * * *

ஸ்ரீ அஹோபில மடம் 36-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வர்ஷாராதந மஹோத்ஸவம், ஷை ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ருந்தாவநத்தில் இரண்டு நாள் முன்னதாகப் பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டு மார்கழி௴ 2௳ (16-12-48) பூர்த்தி யடைந்தது.

வா. ஸ்ரீரங்காசார்யர்

* * * *

ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் 70-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நிகழும் ஸர்வதாரி௵ தை௴ 15௳ (28—1—49) வெள்ளிக்கிழமை, உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுப தினத்தில், ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்

தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய **70-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்,** பாதூர் அக்ரஹாரத்தில், ஸ்ரீ பரந்தூர் அழகிய சிங்கருடைய ப்ருந்தாவநத்தில் வழக்கம்போல் விசேஷமாக நடைபெற்றது.

வா. ஸ்ரீரங்காசார்யர்

* * * *

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, மாதுங்கா, பம்பாய்

ஷை ஸபையின் சார்பில் 27—8—48-முதல் 3—9—48-வரையில் ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவம், ப்ரத்யேகமாய் அமைக்கப்பட்ட கொட்டகையில், வெகு விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. தர்க்க வ்யாகரண சிரோமணி திருப்பதி ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியால் ஸப்தாஹ பாராயணமும், வட்கல் மடம் ப்ரதாந பண்டிதர் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் திநம் ஸ்ரீ பாகவத கதா ப்ரவசநமும், அநேக ப்ரபல பண்டிதர்களால் உபந்யாஸங்களும், ஸங்கீதக் கச்சேரிகளும், ஹரிகதா காலக்ஷேபங்களும் அங்குச் செவ்வனே நடத்தப்பட்டன. 10—12—48 முதல் 14—12—48 வரையில் ஸ்ரீ திருமங்கை மன்னன் உத்ஸவம், ஸேவை சாத்துமறைகளுடன் ஸம்ப்ரமமாய் நடந்தேறிற்று. திருக்குடந்தை அ. ஶ. கா. பச்சைக்கல் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ராகவ பாட்டராசார்ய ஸ்வாமி எடுத்துக்கொண்ட உத்ஸாஹமும் ச்ரத்தையுமே ஷை மஹோத்ஸவம் ஸம்ப்ரமமாய் நடைபெற்றதற்குக் காரணமாகும்.

* * * *

ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநம்

ராயம்பேட்டை அக்ரஹாரத்தில் சென்ற கார்த்திகைமீ முதல், ப்ரவசந ரத்நாகரம் வித்வான் ஸ்ரீ. உப. காடந்தேத்தி கோபாலாசார்ய ஸ்வாமியால் நடததப்பட்டுவரும் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநத்தில், தைமீ 1௳ (14—1—49) வெள்ளிக்கிழமை ஸ்ரீ ஸீதா விவாஹ மஹோத்ஸவம் விசேஷ விமர்சையுடன் நடைபெற்றது. இந்த ஸ்வாமி இன்னிசையோடும் விசேஷார்த்தங்களோடும் பண்டித பாமர ஸாமாந்ய ரஞ்ஜகமாக இதிஹாஸ புராண ப்ரவசநத்தை நடத்தி வருவதால், ச்ரோதாக்கள் மிகவும் குதூஹலிகளாய் ச்ரத்தையுடன் அதை நடத்திவருகிறார்கள்.

வே. ஶ. ஸ்ரீநிவாஸ தாதாசார்யர்
[ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு]

* * * *

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

ஷை ஸபையின் மூன்றுவது ஆண்டு விழா, தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் 10—12—48-ல் தொடக்கமாயிற்று. இவ்விழா ப்ரயுக்தமாக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விசேஷ திருமஞ்சனம் கண்டருளினர். இவ்விழாவின் அக்ராஸநாதிபதியான புதுக்

கோட்டை வித்வான் ஸ்ரீ. உப. காளி ரங்காசார்ய ஸ்வாமியும், மற்றும் பல உபந்யாஸகர்களும், ஷை ஸபையின் அத்யக்ஷர் ஸ்ரீ உப. T. S. ஸௌந்தரம் ஐயங்கார் ஸ்வாமியும் ஸபையில் மர்யாதைகளுடன் கொண்டு வந்து விடப்பட்டனர். தெய்வ வணக்கத்தின் பின்னர், பாராயண வித்யார்த்திகள் ஸ்ரீ அக்ராஸந ஸ்வாமியால் பரீக்ஷிக்கப்பட்டார்கள். அநந்தரம் வித்வான் ஸ்ரீ. உப காளி ரங்காசார்ய ஸ்வாமி 'பீஷ்ம யுதிஷ்டிர ஸம்வாதம்' என்னும் விஷயத்தைப்பற்றி அழகாக உபந்யாஸம் செய்தருளினர். மத்யாஹ்நாத்பரம் ஷை ஸ்ரீ. உப. காளி வித்வான் ஸ்வாமி தலைமையில், ஸ்ரீ. உப. சருக்கை வித்வான் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, 'ஸ்ரீ ஸஹஸ்ரநாம ப்ரபாவம்' என்பது பற்றி உபந்யாஸம் செய்தருளினர். பிறகு ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகளால் உபந்யாஸத்துக்கென்று அனுப்பப்பட்டிருந்த மஹா வித்வான் ஸ்ரீ ஐயரவர்கள் 'வர்ணாச்ரம தர்மம்' என்பது பற்றிச் சொற்பொழி வாற்றினர்கள். ராத்ரி 8½-மணிக்கு ஸ்ரீ. உப ராமாயண கேஸரி கோமல் வி. டி. ஶேஷாத்ர்யாசார்ய ஸ்வாமியால் 'ஸ்ரீ விபீஷண ஶரணாகதி' வெகு அழகாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

11—12—48-ல் ஷை ஸபையின் நான்காம் ஆண்டு விழா உபக்ரம மாயிற்று. ஷை ஸ்ரீ. உப. காளி வித்வான் ஸ்வாமி தலைமையில் வில்லூர் ஆசுகவி ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி 'திருமங்கை மன்னனும் ஸ்ரீ ஸஹஸ்ரநாமமும்' என்பதுபற்றி உபந்யஸித்து, ஷை ஸபையின் விஷயமாகத் தாம் செய்தருளிய சில ஸ்தவ ச்லோகங்களைப் படித்து அவற்றின் பொருளைப் பரக்கப் பேசினர். பிறகு வித்வான் ஸ்ரீ. உப. வரதராஜையங்கார் ஸ்வாமி 'பேராயிர முடையான்' என்பதுபற்றி அழகாகச் சொற்பொழி வாற்றினர். பிறகு, ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அநுக்ரஹித்த நான்கு முழத் துண்டுகள் 25-வித்யார்த்திகளுக்கும், ஸ்ரீமதழகியசிங்கரும் மற்றும் சில ப்ரமுகர்களும் அநுக்ரஹித்த சில ஸம்பாவனைகள் மற்றுமுள்ள 30 வித்யார்த்திகளுக்கும், ஸ்ரீ. உப. வாஜபேயம் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமியால் விநியோகிக்கப்பட்டன. ஸாயம் ஷை ஸ்ரீ. உப வாஜபேயம் ஸ்வாமி 'நமது மதமும் கடமைகளும்' என்பதுபற்றி உபந்யஸித்தருளினர். தேரழுந்தூர் தமிழ் வித்வான் ஸ்ரீ. உப. ரா. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, தாம் இயற்றியருளிய எட்டுப் பாக்களைப் படித்துப் பொருளை ப்ரஸங்கித்தார். அநந்தரம் கல்யாணபுரம் வக்கீல் ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமியால் 'ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்' விரிவாக உபந்யஸிக்கப்பட்டது. இரவு 7½-மணிக்கு, கல்யாணபுரம் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி 'பரமனும் பாஞ்சாலியும்' என்பதுபற்றி ஹரிகதா காலக்ஷேபம் செய்தருளினர்.

12—12—48 ஞாயிற்றுக்கிழமை யன்று, ஸ்ரீமான் வெ. கௌஶிக நாராயணன் (அட்வொகெட்) அவர்கள் 'விப்ர நாராயணன் திருப்பள்ளி யெழுச்சி' என்பது பற்றியும், கல்யாணபுரம் மீமாம்ஸா சிரோமணி ஸ்ரீ. உப. K. S. ராமபத்ராசார்ய ஸ்வாமி 'ஸ்வதர்மம்' என்பது பற்றியும் உபந்யஸித்து ஸபையை ரஞ்ஜிப்பித்தார்கள். இந்த ஸதஸ்ஸை அலங்கரித்த வித்வான்களுக்கும், மற்று முள்ளோர்களுக்கும் ஸ்ரீ. உப. S. R. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி, ஷையார் திருத்தம்பி, ஷையார் ஸோதரி—இவர்கள் அத்யாச்சர்யமான ததீயாராதநத்தைச் செய்தார்கள். ஸபைக்கு எழுந்தருளியிருந்த வித்வான்கள் யாவர்க்கும் ஸம்பாவநாதிகள் செய்யப்பட்டு ஸபை இனிது முடிந்தது.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயண ஸங்கல்ப மஹா யஜ்ஞம்:— 11—1—49 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி தினத்தன்று காலை 4½-மணி முதல் இரவு நடுநிசிவரை கட ப்ரதிஷ்டையுடன் ஷை மஹா யஞ்ஜம் விசேஷ வைபவத்துடன் நடைபெற்றது. மறுநாள் த்வாதசி யன்று திருவீதி வலம் வந்து மஹா யஜ்ஞ சாத்துமறை நடந்தேறிற்று. அன்று பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகள் சுமார் 150 திருநாமங்களுக்கு, ஸ்ரீ. உப. T. A. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி விசேஷ ததீயாராதநத்தைச் செய்வித்தார்.

பொங்கல் விழா:— ஷை ஸபையின் ஆதரவில் மகர ஸங்க்ரமண புண்ய காலத்தை முன்னிட்டு, ஸபையின் சாச்வத போஷகர் ஸ்ரீமான் குழையூர் R. ஸூர்ய நாராயண மூர்த்தி ஐயர் அவர்களுடைய அக்ராஸநத்தின் கீழ், 14—1—49 அன்று இரவு 7-மணிக்கு ஒரு விசேஷ ஸதஸ் கூடிற்று. அப்போது ஸ்ரீ. உப. வித்வான் காளி ரங்காசார்ய ஸ்வாமி 'ஸங்க்ரமண புண்ய கால விசேஷம்,' 'ப்ராஹ்மண்யத்தின் பெருமை,' 'வஸ்த்ர தாந ப்ரபாவம்' முதலிய விஷயங்களைப்பற்றி அழகாக உபந்யாஸம் செய்தருளினர். அடுத்தபடி அக்ராஸநர் அவர்கள், பாராயண வித்யார்த்திகளைப் பரீக்ஷித்து' அவர்களுக்குக் கிருக்கும் ச்ரத்தையை வியந்து பேசினர். தவிர: பெண்கள் 13-வயதுக்குள் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டியது அவச்ய மென்றும், அவ்வாறு தேர்ச்சி பெற்றவர்களே பிற்காலத்தில் தமது ஸந்ததிகளை முன்னுக்குக் கொண்டுவருவதற்கும் ஹிந்து மத தர்மங்களைப் பரிபாலிப்பதற்கும் இயலு மென்றும், இந்த ஸபை அத்தகைய கைங்கர்யங்களைச் செய்துவருவது தமக்கு த்ருப்தியை அளிக்கிற தென்றும் பேசி முடித்தார். இவ்வூர் ஸ்ரீ மடத்து ஏஜெண்ட் ஸ்ரீ. உப. K. கோபாலையங்கார் ஸ்வாமி, ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாராயணத்தின் பெருமையைப் பற்றி விரிவாகப் பேசி வித்யார்த்திகளை அநுக்ஹித்தார். முடிவில், கூடலூர் ஸ்ரீமான் K. ராமஸ்வாமி ஐயர் அவர்கள், பாராயண வித்யார்த்திகளுக்கு வஸ்த்ரங்களையும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம புஸ்தகங்களையும் நன்கொடையாக வழங்கினர்.

ஸ்ரீ பாகவத பக்ஷாஹ உபந்யாஸம்:— 3—12—48-லிருந்து ஸ்ரீ பாகவத பக்ஷாஹ உபந்யாஸம் கோமல் ராமாயண பூஷணம் ஸ்ரீ. உப. V. T சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமியால் நடத்தப்பட்டுவருகிறது. அநேக பக்த கோடிகள் கேட்டுக் களிக்கின்றனர்.

கடாம்பி. நரஸிம்ஹாசார்யர்
[கார்யதர்சி]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வதாரி ௵ மாசி (கும்ப) மீ°.

12—2—49	1உ	சனிக்கிழமை	...	சூந்ய திதி ; விஷ்ணு பதி ; கும்ப ரவி 2. 36 ; [கும்ப ஸங்க்ரமண தர்ப்பணம்]
13—2—49	2உ	ஞாயிற்றுக்கிழமை	...	கும்ப பூர்ணிமா—க்ருஷ்ண ப்ரதமா திதி த்வயம்; மாசிமகம் என்னும் புண்ய கால ஸ்நாநம்.
20—2—49	9உ	ஞாயிற்றுக்கிழமை	...	அஷ்டகா ஶ்ராத்தம்
21—2—49	10உ	திங்கட்கிழமை	...	அந்வஷ்டகா ஶ்ராத்தம்
23—2—49	12உ	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
27—2—49	16உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
6—3—49	23உ	ஞாயிற்றுக்கிழமை	...	கும்ப சுக்ல ஸப்தமி திதி
7—3—49	24உ	திங்கட்கிழமை	...	கும்ப சுக்ல அஷ்டமி திதி
8—3—49	25உ	செவ்வாய்க்கிழமை	...	கும்ப சுக்ல நவமி திதி
9—3—49	26உ	புதன்கிழமை	...	கும்ப சுக்ல தசமி திதி
10—3—49	27உ	வியாழக்கிழமை	...	கும்ப சுக்ல ஏகாதசி திதி ; ஸ்ரீ குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்
11—3—49	28உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம் ; ஸ்ரீ அஹோபில மடம் 37-ம் பட்டம் பிள்ளபாக்கம் ஸ்ரீ வீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
12—3—49	29உ	சனிக்கிழமை	...	கும்ப சுக்ல த்ரயோதசி திதி
13—3—49	30உ	ஞாயிற்றுக்கிழமை	...	* கும்ப சுக்ல சதுர்த்தசி திதி : காரடையான் நோன்பு; மீந ரவி – 51-0 [மீந ஸங்க்ரமண தர்ப்பணம் மறுநாள்.]

---

*இன்று மக நக்ஷத்ர மானாலும், பூர்ணிமா ஸம்பந்த மில்லை யாதலால், புண்ய காலம், பூர்ணிமா ஸம்பந்த முள்ள 2உ ஞாயிற்றுக்கிழமை திநமே. ஒரு மாஸத்தில் இரண்டு நக்ஷத்ரங்கள் ஸம்பவித்தால் உத்தர நக்ஷத்ரம் க்ராஹ்ய மென்பது ஜந்ம நக்ஷத்ர திநத்தின் நிர்ணயத்தைப் பற்றியது. புண்ய கால நிர்ணயத்திற்கோ வென்றால், அந்த மாஸத்தின் பூர்ணிமா யோகமே நியாமகம். மீந மாஸத்து ஸங்க்ரமண ப்ரயுக்தமான தோஷம் அர்த்த ராத்ராத் பரம் ஸம்பவிக்கிறபடியால், ஸ்ரீ தோழப்பர் ஸித்தாந்தப்படி, அன்று அது இல்லையே யாயினும், பூர்ணிமா யோக மில்லை யாதலால் இன்று தத் ப்ரயுக்த புண்ய கால மில்லை.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாழ்த்து

[ஸ்ரீ வைஷ்ணவ தாஸன் ஸமர்ப்பணம்]

மருவினிய புண்டரிக மலரளித்த பெருமாட்டி! மாயன் செய்ய
வரையனைய திருமார்வத் தலங்கார மாமணியே! வையத் துள்ளார்
பெருவினைகட் கொருமருந்தாம் பெருந்தேவன் நரசிங்கன் பிரியத் தேவி!
திரு! இனிய புதுமலராய்த் திங்கள்தொறும் மலர்ந்தருளும் தேவி! வாழி!

எழாண்டு பூர்த்தி யடைந்து எட்டாவது பிராயத்தை யடைந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா தேவியே! தேவரீர் நீடூழி வாழவேண்டும்.

பேதைப் பருவங் கடந்து பெதும்பைப் பருவத்தை யெய்திய தேவரீருக்கு இந்தத் திருநாளில் அடியோங்களுடைய அஞ்ஜலியையே காணிக்கையாக ஸமர்ப்பிக்கிறோம்.

மாதந்தோறும் விதம் விதமான அழகுடன் இனிய ரஸத்தைப் பெருக்கிக் கொண்டு புதுமலர்ச்சி பெற்று விளங்கும் தேவரீரை அடியோங்கள் வாயார வாழ்த்துகின்றோம்.

தாமரைப் பூவில் அவதரித்த தேவரீர், அதனுடைய ஒப்புயர்வற்ற பரிமளத்தை வீசிக்கொண்டே அடியோங்களுடைய சிறு குடில்களுக்கு எழுந்தருளி, அடியோங்களைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்கிறீர்

தேவரீர் கட்டழகனாகிய ஸ்ரீ சிங்கப்பெருமானுடைய திருமார்வத்தில் எழுந்தருளியிருந்து, அந்தத் திருமார்வத்துக்குச் செய்யும் அலங்காரத்தையும், அங்கிருந்து வீசும் காந்தியையும், அடியோங்கள் சிறு குடில்களுக்கும் கொண்டு வருகிறீர்.

தேவரீர் மாலோலப் பெருமானுடைய மடிமே லிருந்துகொண்டு அவரை அடியோங்களிடம் அபிமுகமாகச் செய்வதா லன்றோ, அவர் அடியோங்களுடைய சிறு அஞ்ஜலியைப் பெரிய உபாயமாகத் திருவுள்ளம்பற்றி, அடியோங்கள் செய்துள்ள அபசாரங்கள் அத்தனையையும் பொருள் செய்யாமல் நன்மையையே புரிந்தருளுகின்றார்!

ஸ்ரீ சிங்கப்பெருமான் உலகங்களுக்கெல்லாம் தனிநாதனாக இருந்தாலும், கருணாரூபிணியாகிய தேவரீருக்குப் பரவசராக இருப்பதாலன்றோ, விதம் விதமாகவும் உலகத்துக்கு ஹிதமாகவும் திருவிளையாடல்களைப் புரிந்து தேவரீரை மகிழ்விக்கிறார்!

எம்பெருமானுடைய அவதாரங்களுக்கு அநுரூபமாகத் தாமும் அவதாரம் செய்து, அவருடைய லீலாரஸத்தை வ்ருத்திபண்ணும் திருமாமகள் அல்லவோ தேவரீர்!

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா தேவியே! தேவரீர் பல்லாண்டு பல்லாண்டாகப் பல்கி வளர்ந்து உலகத்தை வாழ்வித்தருளவேணும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஜாதி மத மற்ற ஜந நாயகம்

ஜாதி மத வ்யத்யாஸங்கள் ஜநங்களுடைய ஒற்றுமைக்கும் தேச முன்னேற்றத்திற்கும் இடையூறுகளாகு மெனக் கருதி, அவற்றை ஒழிக்கவேண்டு மென்னும் மனப்பான்மை கொண்ட நமது புதிய இந்திய ஸர்க்கார், மதம் ஸம்பந்தப்பட்டவரையில், நமது தேசம் எந்த முறையில் பரிபாலிக்கப்படவேண்டும் என்னும் விஷயத்தைக் குறித்துப் புதிய ஆலோசனையைச் செய்துவருவதாக நாம் அறிகிறோம். ஸ்ரீ ஜயகரும், ஸ்ரீ. S. வரதாசார்யரும், இன்னும் இவர்களைப் போன்ற மற்றும் பல பெரியோர்களும், இந்த ஆலோசனையை விசாரித்துத் தம் தமது புத்தியில் தோன்றும் அதிஶங்கையைத் தக்கபடி வெளியிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் மத ஸம்பந்தமான நிர்வாஹம் நடத்தப்பட்டு வந்தால், அது தேசத்திற்குப் பெரிய தீமையை விளைவிக்கு மென்பதே இம்மஹான்களுடைய அதிஶங்கை. ஆனால், இவ்வதிஶங்கையை வெளியிட்டிருக்கும் இப்பெரியோர்கள், தர்மத்திற்கு ஹாநி ஏற்பட்டு அதன் மூலம் தேசத்திற்குக் கெடுதி ஸம்பவிக்கு மென்று மட்டுமே கூறியிருக்கிறார்களே யொழிய, 'தர்மம்' என்பது எதைக் குறிக்கிற தென்பதையாவது, இவர்களின் முறை அதை எப்படிப் பாதிக்கு மென்பதையாவது அவர்கள் விளக்கவில்லை. அதைச் சற்று விசாரிக்க விரும்புகிறோம்.

'தர்மம்' என்னும் ஶப்தத்திற்கு இரண்டு வித அர்த்தங்கள் சொல்லக் கூடும். ஸாமாந்யமாக அது ஒரு கட்டுப்பாட்டைக் குறிக்குமென்று சொல்லலாம். இக்கட்டுப்பாட்டைப் பகவத் ஸ்ருஷ்டியில் மநுஷ்ய ப்ரப்ருதி ஸ்தாவர பர்யந்தமான ஸகல ஜந்துக்களிலும் காணலாம். ஜந்துக்கள் உண்டாவது, அவை பரிணமிப்பது, அவை மறைந்துபோவது, ஆக இம்மாதிரியான மாறுதல்கள் நடந்துவருவதைப் பார்த்தால் ப்ரபஞ்சம் முழுவதும் ஒரு பந்தத்திற்கு உட்பட்டே வர்த்திக்கின்ற தென்பது விளங்கும். ஜந்துக்களுக் கெல்லாம் அவையவைகளுக்கு ஏற்ற நியதமான சிற்சில வ்யவஸ்தைகள் இருக்கின்றன

வென்றும், அவைகள் அந்த வ்யவஸ்தைக்குக் கட்டுப்பட்டே வர்த்தித்து வருகின்றன வென்றும் நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். ஓர் இனத்தைச் சேர்ந்த ஜந்துவின் நடவடிக்கையை மற்றோரினம் பின்பற்றுவ தில்லை. ஒரு ஜந்துவும் தனக்கு வ்யவஸ்திதமான ரூபம் ஆகாரம் சீலம் இவற்றை த்யஜித்து, வேறு ரூபம் குணம் முதலியவற்றைத் தன் இச்சாநுஸாரமாக ஆரோபித்துக் கொள்வதைக் காண்கின்றோ மில்லை. அது இயலாத கார்யம். இப்படி ஸர்வத்திற்கும் அதிஷ்டானமாயிருக்கும் வ்யவஸ்தையைத் தான் மநு வ்யாஸர் வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகள் 'தர்ம' சப்தத்திற்கு ஸாமாந்யார்த்தமாக வ்யவஹரித்திருக்கிறார்க ளென்று தெரிகிறது. 'யஜெஷ ஸவஸு ஹூதிஷிதஃ' என்னும் வாக்யமும், 'ஸர்வ' சப்தத்தால் சொல்லப்படும் ஜகத்தின் ப்ரதிஷ்டா காரணமான தர்மத்தையே வ்யவஹரிக்கின்றது. மஹா பாரதத்திலும்,

"நஜாத- காஶாஜ ஸயாஜ ஞொஹாதூஜம் த்யஜெஜ்ஜீவிதஸ்யாவி ஹெதொ:" என்று உள்ளது. ஆகையால் தர்மமே ஜகத்தின் ஸ்திதிக்குப் பரமம் காரண மென்று ஒத்துக்கொள்ளவேண்டும்.

இந்தத் 'தர்ம' சப்தத்தை சாஸ்த்ரஜ்ஞர்கள் சில விசேஷார்த்தங்களில் ப்ரயோகம் செய்திருப்பதையும் பார்க்கிறோம். மீமாம்ஸகர்கள் 'சொஜநா லக்ஷணாத்ெஷா யஜஃ' என்றும், மற்றும் சிலர், 'சூஜாஜவூஹவொ யஜஃ' என்றும், வேறு சிலர், 'வாஜுளகீக ஸ்ரெயஸாய நம யஜஃ' என்றும் 'தர்ம' சப்தத்திற்கு லக்ஷணம் கூறியிருக்கிறார்கள். 'இந்த அதிகாரியால் இது செய்யப்படவேண்டிய தென்று ஒரு விதியால் விதிக்கப்படுமது தர்மம்' என்பது மீமாம்ஸகர்களின் கொள்கை. இந்தக் கொள்கைப்படி 'ஒவ்வொரு கார்யத்திலும் நாம் எந்தக் கர்மாவைச் செய்கிறோமோ அதுவே கர்த்ரு; அதுவே பலப்ரதம்' என்பது அவர்கள் அபிப்ராய மென்று ஏற்படுகிறது. ஆகையால் யாகம் முதலியனவும் 'தர்ம' சப்தத்தால் அவர்களால் வ்யவஹரிக்கப்படுகின்றன. இரண்டாவது லக்ஷணமான 'சூஜாஜவூஹவொ யஜஃ' என்பதும் கொஞ்சம் கௌணமாக எடுத்துக்கொள்ளப்பட்டாலொழிய, அது அதிவ்யாப்தி அவ்யாப்தி முதலான தோஷங்களால் துஷ்டமாகும் என்பது வ்யக்தம். மூன்றாவது கொள்கைப்படி பரலோக ச்ரேயஸ்ஸை உத்தேசித்து எது ஸாதநமாக அங்கீகரிக்கப் படுகிறதோ அது தர்ம மென்று ஏற்படுகிறது. இதன் ப்ரகாரம் ப்ரஹ்மஜ்ஞானமும் தர்மமாகும். 'ஷயம்ஹி வரஜொ யஜெஷா யஜொமெநாகூஸநழ' என்னும் வாக்யம் இதற்கு ப்ரமாணம். இம் மூன்று கொள்கைகளுள் 'பரலோக ஸம்பத்தமான இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி இவைகளுக்கு ஸாதநமாயிருப்பது தர்மம்' என்ற மூன்றாவது மதமே

ஒருவித தோஷத்திற்கும் ஆஸ்பதமாக இல்லாததால், அதுவே நமது ஸித்தாந்திகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸாதநம் பரலோகத்தைப் பற்றியதாதலால் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்குக் கோசர மன்று.

‘ குஜஜூா தவர்துஹவதீ விதிதா துயீ வா
தா॰ ஷி வூஜாணஉ-வஜஜ-ஈ தீஜீ யெ௨யெ-௨ ’

இப்பொழுது ராஜாங்கத்தார் நமது ஶாஸ்த்ரங்களில் அபிவ்ருத்தியைத் தேடாமல், அவைகளின் லோபத்தையே விளைவிக்க ப்ரயத்நப்படுகிறார்கள். அப்படி ஶாஸ்த்ரங்களுக்கு லோபம் வரும்பக்ஷத்தில் தர்மம் அபிவ்ருத்தி யடைவது துஸ்ஸாத்யம். ஶாஸ்த்ரங்கள் எழுதப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத பாஷைக்கு இப்போதுள்ள ராஜாங்கத்தார் அவ்வளவாக அபிமாநம் பாராட்டுவதாகத் தெரியவில்லை. ஸம்ஸ்க்ருத பாஷையும் லோப மடைந்து, அதன் வழியாக ஶாஸ்த்ர ப்ரசாரமும் தடைப்பட்டு நின்றால், தர்மத்தினுடைய வளர்ச்சி எப்படி ஸம்பவிக்கும்? நமது ஶாஸ்த்ரம் ஆதரிக்கப்படாமல் போகும் பக்ஷத்தில், ஜகத்து ஒருவித கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் பெரிய க்ஷோபத்தை அடைந்துவிடும் என்பதில் ஆக்ஷேப மில்லை. இது நமக்கும் பெருத்த பீதியை ஜநிப்பிக்கின்றது. பகவதிச்சையே எல்லாவற்றுக்கும் நியாமகம்.

ஈட்டில் ஒரு ரஸோக்தி

‘ ஈச்வரனுக்கு மூன்று ஆபத்து வந்து கழிந்தது ’ என்று எம்பார் அருளிச்செய்வர். அதாவது: த்ரௌபதிக்கும், ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கும், ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக்கும் உதவிற்றிலனாகில், ஸம்ஸாரிகள் ‘ ஈச்வர தத்வமில்லை ’ என்று எழுதி எழுத்திடுவார்களிறே. ஆழ்வாரும் ‘ எங்ஙனம் தேறுவருமர் ! ’ என்று தம்முடைய இழவிலும், ‘ ஸ்ரீ வைஷ்ணவர்கள் அத்யவஸாயம் குலைகிறதோ ? ’ என்றிறே அஞ்சுகிறது. தம்முடைய இழவுக்கு நோகையன்றியிலே ஈச்வரனின் அருளுக்கிறே இவர் நோவது !

தமிழ்நாடு ... நூலகம்
189255

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு

[21—12—48 முதல் 20—1—49 வரை]

			ரூ. அ.
5	ஸ்ரீ.	V. R. நாராயணன், பஸவங்குடி, பெங்களூர்	3—0
18	,,	M. K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தாதர், பம்பாய்	3—0
41	,,	ராவ் ஸாஹிப் W. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்	3—0
71	,,	S. ஸௌந்தரராஜையங்கார், புத்தூர், திருச்சி	3—0
75	,,	T. S. நரஸிம்ஹாசார்யர், தர்மபுரம் மடம், மாயூரம்	3—0
80	,,	S. வெங்கடரங்க ஐயங்கார், B. A. L. T., கங்கவல்லி	3—0
125	,,	A. பார்த்தஸாரதி ஐயங்கார், பம்பாய் 1	6—0
148	,,	P. S. வெங்கடாசார்யர், B. A. L. T., திருப்பத்தூர், ராமநாதபுரம்	6—0
171	,,	S. N. ரங்காசார்யர், தென்காசி	3—0
197	,,	K. S. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், பம்பாய்	9—0
225	,,	A. மாதவையங்கார், பெங்களூர் 4	3—0
234	,,	V. T. வேதாந்தையங்கார், ப்ளீடர், பூந்தமல்லி	9—0
247	,,	N. S. நாராயணையங்கார், டாட்ஹண்டர் நகர், சைதாப்பேட்டை	3—0
289	,,	V. S. ரங்காசார்யர், கோயம்பத்தூர்	1—0
421	,,	D. ஸௌந்தரராஜன் B. A. L. T., திருப்பாப்புலியூர்	3—0
443	,,	P. N. சேஷையங்கார், ஸ்ரீரங்கம்	3—0
483	,,	V. ராமஸ்வாமி ஐயங்கார், B. A., G. D. A. புகலூர், கரூர்	6—0
485	,,	T. துரைஸாமி ஐயங்கார், P. B. பெங்களூர்	3—0
494	,,	R. சேஷன், பொன்மலை	6—0
592	,,	செல்லம் ஐயங்கார், மணவாசி	6—0
619	,,	கநகவல்லி யம்மாள், ஆழ்வார்பேட்டை, சென்னை	3—0
644	,,	சக்ரவர்த்தி ராஜம்மாள், அவளூர்	1—8
686	,,	V. S. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், Rtd. Eng. தி. நகர்	3—0
701	,,	K. க்ருஷ்ணஸ்வாமி, மயிலாப்பூர், சென்னை	6—0
703	,,	V. B. நாராயணன், புது டெல்லி	3—0
749	,,	A. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வொகெட், ஸெகந்த்ராபாத்	3—0
756	,,	வங்கீபுரம் K. ஜகந்நாதையங்கார், கார், பம்பாய்	6—0
765	,,	T. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யர், மாதுங்கா, பம்பாய்	6—0
769	,,	M. யதிராஜ நாயகர், B. A. L. T., மீஞ்சூர்	3—0
795	,,	T. துரைஸாமி ஐயங்கார், ஒலக்கூர்	1—8
801	,,	L. ரங்கஸாமி ஐயங்கார், (A. M. I. H.,) மாதுங்கா, பம்பாய்	3—0
808	,,	D. ரங்காசார்யர், வக்கீல், செங்கல்பட்டு	3—0
		மொத்தம் ரூ.	127—0

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லெளகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

*இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.*

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டா லன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

**ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.**

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.